ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

துரோபதை குறம்.

இஃது

மதுரைப் புதுமண்டபம் புத்தகவியாபாரம்

மு. கருப்பண பிள்ளை அவர்கள்

விருப்பத்தின்படி.

சென்னைப்புரசை

நாராயணசாமிப்பிள்ளை

அவர்களது

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது,

விலை] 1905. [அணா 2.

16, சரவணப் ... வீதி, புரசை, சென்னை.

T016528

உ

கடவுள் துணை.

துரோபதைகுறம்.

விருத்தம்.

திருத்திபகுழற்பாஞ்சாலி செல்வத்துரோபதையாள்மங்கை
பெருந்திருவாள்தன்பக்கல் பேசியகுறத்தைப்பாட
பொருந்தியதெய்வச்செம்பொற் பொனமலைவாழுங்கங்கை
தருந்தியமுகமனைத்தும் தகமதுதுகிசெய்வீரே.

ஆதியேயரியேபோற்றி அச்சுதாபோற்றிபோற்றி
சோதியேசுடரேபோற்றி சுடரொளிவிளக்கேபோற்றி
நாதனேவள்ளிபங்கா நாரணன்மருகாபோற்றி
காதலாய்குறத்தைப்பாட கந்தனேயருள்செய்வாயே.

பஞ்சபாண்டவர்கள்தேவி பாஞ்சாலிபாவைதானும்
வஞ்சகன்திரியனாலே வனவாசம்பன்னிரண்டும்
தஞ்சமாய்கழிந்தபின்பு தானுமேவிலாடதேசம்
வஞ்சியுமன்னர்கூட.வந்துமேதோன்றினரே.

பரமசிவம்.

மஞ்சுலாவுபாஞ் சாலன்நன்மாநகர்
விஞ்சுதுரோபதை மேசுறுநற்குற
வஞ்சிமாலை வழுத்தவேதிங்களார்
செஞ்சடிலன் றிருவடிவாழ்த்துவாம்.

விநாயகர்.

பொன்னுமாமணிப் பூங்கழற்பொற்பின
டுன்னுபாஞ்சாலி வஞ்சிக்குறஞ்சொலப்
பன்னுதும்பையும் கொன்றைப்பனிமதி
மின்னுவேழ முகவனைவேண்டுவாம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திங்களுரகரவணியுஞ்சடையிலங்குபொன்முடியுஞ்
மிசையிதிரதன்மா
தந்தவதனைத்தயங்கநான்மறையுஞ்சயசயவென்
றேத்திப்போற்றப
பொங்கமுடனின்றநல்லோய்தமியனுக்கிந்நூற்குமனம்
புளகம்பூப்பப்
பங்கமறவெனனுவிலிருந்துபொருண்மருதுமருள்
பாலிப்பாயே.

வேறு.

திருந்திரபொழில்பாஞ்சாலி சீர்கதைதமிழிற்பாட
பெருந்திருவாளைப்பாதம் பெட்புடன்வணங்கியேத்தி
பொருந்தியநூறுவண்ணம் புகல்குறவஞ்சியாக
வருந்தியேயிந்தக்காலத வளப்பெறப்பாடுவோமால்.

காப்பு.

வெண்செந்துறை-விநாயகர் துதி.

விக்கினவிநாயகரே வேலவரேமுன்னடவாய்
சக்திவிநாயகமே சரிந்தவயிற்றோனே
அந்திபகலுமுமை அன்பாகநானமறவேன்
முந்திமுந்தியெங்களுக்கு முன்னடக்கவேண்டுமையா
ஒருகையில்மோதகமும் ஒருகையில்செங்கரும்பும்
ஒருகையில்தேங்காயும் ஒருகையில்நற்கரும்பும்
இதனைப்பெற்றுமல்லோ இருந்தீர்மாதடியில்
உம்மைக்கண்டுபரமசிவன் கருத்திலினிவாகி
விக்கினரும்வேலவரும் இருவரும்வாருமென்றார்
அந்தவுரைகேட்டு அடிதொழுதீர் இருவர்களும்
பரமசிவன்பார்த்துப் பார்வதியைக்கண்காட்டி
பிள்ளைகளைத்தான்பார்த்து பூசிப்பாயேதுசொல்வார்
ஈரேழுலகமெல்லாம் இருவருஞ்சுற்றிவர்தால்
முந்திவந்துநின்றவர்க்கு இந்தக்கனிதருவேன்
என்றவுரைகேட்டு எழுந்தாரேவேலவரும்

பச்சைமயிலேறிப் பாரெல்லாஞ்சுற்றிப்போனார்
அப்போதுநீரெழுந்து அயனாரைச்சுற்றிவந்தீர்
ஈரேழுலகமெல்லாம் இவர்தானேதெய்வமென்று
சுற்றிவந்தபாவனையை மெத்தெனவேதானறிந்து
சந்தோஷப்பட்டுமல்லோ கொடுத்தார்கனியுமக்கு
கானமயிலேறிக் கட்டேழுலகமெல்லாம்
எல்லையெல்லாஞ்சுற்றிவந்து ஏமார்ந்தார்வேலவரும்
கர்த்தருடையகைதனிலே கனிபெற்றுவந்தவரே
கனிபெற்றுவந்தவரே காருமையாவிக்கினரே
துரோபதையாள்குறத்தை தொல்லுலகில்யான்பாட
பாஞ்சாலிதன்குறத்தை பார்தனிலேயான்பாட
பாடவருள்புரியும் பார்வதியாள்புத்திரரே
சொல்லவருள்புரியும் சிவசங்கரனார்புத்திரனே
அருள்புரியவேண்டுமையா ஆண்டவாயெந்தனுக்கு

முருகர்துதி.

ஆறுமுகம்படைத்த அரனார்திருமகனே
சரவணப்பொய்கைதனில் வந்துதித்தசண்முகனே
அசுரருடல்பிளக்க அவதாரமானவரே
கானமயிலேறும் கர்த்தருடபுத்திரரே
பச்சைமயிலேறும் பார்வதியாள்புத்திரரே
புள்ளிமயிலேறும் வள்ளிமணவாளா
வள்ளிமணவாளா வந்தென்னையாளுமையா
அக்கினியில்வந்துதித்த ஆரணங்குதுரோபதையாள்
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அபிஷேகப்பத்தினியாள்
பத்தினியாள்தன்குறத்தை பாருலகில்பாடுதற்கு
கர்த்தருடபுத்திரரே கடுகவந்துகாருமையா
கதைகளதுதப்பாமல் காருமையாவேல்முருகா
பாட்டுதவறாமல் பட்சமுடன்வந்தருளும்
வாக்குதவறாமல் வர்னமுகம்பாரும்

சரஸ்வதியம்மன்துதி.

வராகவதாரங்கொண்ட மகாவிஷ்ணுதன்னுடைய
நாபிக்கமலந்தன்னில் வந்துதித்தநான்முகனார்

நாவிலிருப்பவளே நற்கருத்தையுண்டுபண்ணும்
மாயன்மருமகளே வந்தெனக்குமுன்னடவும்
தாயேசரஸ்வதியே சங்கரியேமுன்னடவும்
பஞ்சவர்கள்பத்தினியாள் பாவைகுறமுறைக்க
வஞ்சனைகளில்லாமல் வந்தெனக்குமுன்னடவும்
சொல்லுதவருமல் சொற்குற்றம்வாராமல்
ஏடுதவருமல் எழுத்தாணிசாயாமல்
நாவுதவருமல் நடத்துமம்மாயிக்கதையை
தப்பிதங்கள்வாராமல் சங்கரியேமுன்னடவாய்
குற்றங்கள்வாராமல் கொம்பனையேவாருமம்மா
கார்க்கக்கடனுனக்கு கர்த்தருடதேவியரே
பாடவெனக்கருளும் பாரளந்தான்மருமகளே
சொல்லவருள்புரியும் சுந்தரியேயெந்தனுக்கு
கடல்வண்ணன்மருமகளே கைதொழுதுபாடுகிறேன்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

கதையின் வரலாறு.

பட்டணமாம்பட்டணமாம் இந்திராபுரிபட்டணமாம்
இந்திராபுரிபட்டணத்தை யிருந்தரசு ஆளுகையில்
பட்டணத்தையாளுகின்ற பஞ்சவர்களைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவர்க ளரசாளும்நாளையிலே
கோணாதமாதவத்துக் குந்தியம்மாள்தாயாரும்
தோராவடிவழகி துரோபதைநாயகியும்
அருச்சுனனார்தேவியர்கள் அனைவருமொன்றாக
எல்லவருமொன்றாக யிருந்தரசு ஆளுகையில்
அத்திபுரமாளும் அரவக்கொடியோனும்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்தம்பிகளும்
கருணன்சகுனியும் காங்கேயர்வள்ளவரும்
சிற்றப்பாவிதுரனும் சீருள்ளமற்றவரும்
பாட்டனார்வீஷ்டுமரும் பாரியதுரோணருமாய்
எல்லவருமாக.எல்லையுலகாளுகையில்
அத்திபுரமாளு மரவக்கொடியோனும்
அம்பலத்துவாசலிலே.அனைவருக்குமேதுசொல்வான்
என்பங்காளிபஞ்சவர்கள் பாருலகமாளுகிறார்
இவரையும்நான்துரத்தி ஆளவேண்டுபசீமையெல்லாம்
இப்படிக்குச்சொல்லியல்லோ எழுதினான் ஓலையொன்று
விதுரனைப்போகவிட்டு ஐவரையுந்தானழைத்து
மாயத்தால்சூதாடி மண்ணாறுகமண்பறித்து
மன்னர்சபைநடுவே மாதைதுகிலுரிந்து
கொற்றவர்கள்தன்சபையில் கோதைதுகிலுரிந்து
பண்ணாதகோலமெல்லாம பண்ணியந்தபஞ்சவரை
காட்டாதகோலமெல்லாம் காட்டியந்தபஞ்சவரை
பன்னிரண்டுதன்வருஷம் பாரவனவாசஞ்செய்து
பதின்மூன்றுதன்வருஷம் அக்கியாதவாசஞ்செய்து
உருவந்தெரியாமல் ஒளித்துமிகதானிருந்து
பதினாலாந்தன்வருஷம பிறந்தபிறகாக
பதினெட்டாய்நாளையிலே படைபொருதுஞ்சண்டையிலே

ஆடிப்பறக்கும் அடர்ந்தசமர்க்களத்தில்
எங்கள்முடிகளெல்லா மிறக்கும்படியடித்து
வண்ணமுடிசிந்திரங்கள் மாண்டபிறகாக
வந்துமேனிங்களெல்லாம் வாழுமராசாண்டு
என்றுமவனுரைத்தான் எரிநாகங்கொண்டவனும்
அந்தவுரைகேட்டு ஐவர்பஞ்சபாண்டவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவரு மாரணங்குதுரோபதையும்
அப்படியேநல்லதென்று ஆரணியம்போய்நடந்தார்
வனமாய்வனந்தாண்டி வந்தாரிருண்டவனம்
அந்தவனந்தனிலே ஆணழகர்பஞ்சவர்கள்
பரணசாலையுண்டுபண்ணி பஞ்சவர்கள்தானிருந்தார்
பண்ணையதுகலவைப் பரட்டைப்புளிகாணை
தும்பைபுளிகருணை தூதுவளைமுள்கிரை
கிள்ளிசமைத்துமவர் காலங்கழித்தார்கள்
இப்படியாயங்கே இருந்தார்சிலகாலம்
மற்றுஞ்சிலகாலஞ் சென்றபிறகாக
இராமரிஷிநாவாலே நால்வருந்தான்மாண்டார்
தருமரவர்பார்த்து தான்புலம்புபவேளையிலே
நாராயணர்வந்து எழுப்பினார்நால்வரையும்
ஆயருடபுண்ணியத்தா லங்கேபிழைத்தார்கள்
மற்றுமொருவனத்தில் வந்துமவர்வாசம்பண்ணூர்
அங்கேயும்பட்ட அவதிகள்மெத்தவுண்டு
பத்துவருஷமுமேபட்டார்வெகுபாடு
பத்தாம்வருஷத்திலே பாஞ்சாலியேதுசொல்வாள்
ஐவரையுந்தெண்டனிட்டு ஆரணங்குகேட்கலுற்றாள்
ஐவர்களுங்கேளுங்கள் அடியேனொருவார்த்தை
அத்திபுரமல்லோ. அரவக்கொடியோனும்
சீமையும்பூமியுந் தேசத்தில்நெல்விளையும்
எப்படிக்கிருக்குதென்று நான்பார்த்துவாரேனையா
போகவிடைதாருமென்று உத்தமியாள்கேட்கலுமே
தக்கப்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
ஐவருக்குந்தேவியரே ஆரணங்குநீர்கேளும்
பங்காளிவாசலுக்கு நீபோகநீதியுண்டோ
தாயாதிவாசலுக்கு தனியாகப்போகலாமோ

போகவிடந்தனிலே பொல்லாங்குதானடந்தால்
வந்துஎமக்குரைப்பார் யார்காணும்பங்கையரே
சொல்லுந்துரோபதையே யென்றுயவர்கேட்க
அப்போதுதுரோபதையாளாரணங்குயேதுசொல்வாள்
இவ்வேஷமாகவேநான் போவேனுமன்னர்களே
கொச்சைக்குறத்தியைப்போல் போய்வாரேன்மன்னர்களே
நான்-மலைக்குறத்திபோலாக வடிவெடுத்துபோனாலே
அத்திப்புரந்தனிலெனக்கு அவகேடுவந்தாலே
ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஆயர்துணையாவார்
மச்சாவதாரங்கொண்ட மாயர்துணையாவார்
கூர்மாவதாரங்கொண்ட கோபாலர்காத்திடுவார்
வராகவதாரங்கொண்ட வைகுந்தர்காத்திடுவார்
போகவிடைதாருமெனப் பொன்னடிக்குத்தெண்டனிட்டாள்
ஆணல்மழகுமன்னர் ஐவர்களுந்தான்பார்த்து
ஆரணங்குதுரோபதைக்கு ஐவருந்தாமுரைப்பார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
பாஞ்சாலன்எக்கியத்தில் வந்துதித்தபைங்கிளியே
உந்தன்மனதுபடி உத்தமியேசெய்யுமென்றார்
உன்-சித்தத்துக்கேற்றபடி செய்யுமென்றார்பஞ்சவர்கள்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதுரோபதையாள்
அருச்சுனராசாவை ஆரணங்குதானழைத்து
இருவருமாகவல்லோ இளந்தோப்பிலேவந்தார்கள்
உருத்திராட்சமரத்தடியில் உட்கார்ந்திருவருமாய்
மாயன்றனைநினைத்து மாயகொண்டைபோடவென்று
மெய்க்கூந்தல்தன்னை மேலாடைக்குள்ளொளித்து
பொய்க்கூந்தல்மாயன் பொருந்தக்கொடுத்திடவே
தோராவடிவழகி துரோபதையாள்கூந்தலதை
அருச்சுனராசவர் அவர்கையில்தான்கோதி
சிவிசினுக்கறுத்து சிமிள்போலக்கொண்டையிட்டு
வாரியகூந்தலதை வண்ணமுடிகொண்டையிட்டு
கொண்டைக்கழகாகக் குச்சிமிகச்சொருகி
வகையாயிரம்பெற்றவொரு வான்சவுரியுட்சொருகி
ஆயிரம்பொன்பெற்ற அணிசவுரியுட்சொருகி
கொண்டையிற்றுழம்பூவும குடமல்லிகான்முடித்து
மல்லிகைமுல்லையும் மருக்கொழுந்துதான்முடித்து

ஆணழகிகண்களுக்கு அஞ்சனமையெழுதி
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிபொட்டுமிட்டு
சீரானநெற்றியிலே திலர்தமிகவணிந்து
காதுக்கழகாக கம்மலதுசோடித்து
தந்தத்தால்கம்மலது தையலர்க்குகாதிலிட்டார்
பக்கத்தில்ஒன்னப்பூவும் பச்சைக்கல்நல்முருவும்
கொப்பும்மயிர்மாட்டி கோதையர்க்குத்தானணிந்தார்
ஒண்டிபச்சைதொங்கலிட்டு வொருகல்புதைத்திருக்க
முகத்துக்கழகாக மூக்குத்திதானணிந்தாள்
மாருக்கழகாக மார்பதக்கப்தாவடங்கள்
பலகாரைக்கோர்த்ததொரு பருத்தநல்லதாவடங்கள்
அடுக்குப்பலகாரை அழகானதாவடமாம்
கொத்துப்பலகாரை கோர்வைமணித்தாவடமாம்
அக்குமணிகொக்குமணி அழகானபாலமணி
பச்சைமணிபாலமணி பலவகையானமணி
உட்கழுத்தில்கொஞ்சுமணி தரித்தாளேயுத்தமியாள்
கைகட்டுஞ்சரிவளையல் கைநிறைந்தகுறவளையல்
முன்கைமுழங்கை நிறைந்தகுறவளையல்
அஞ்சுவிரலுக்கும் அழகானமோதிரங்கள்
குறவரிடமோதிரங்கள் தரித்தாளேகொம்பனையாள்
கறுப்புநல்லதட்டிசேலை கட்டினுள்துரோபதையும்
குறத்திவடிவானுள் கொம்பனையாளப்போது
ஆணழகுமன்னர் அருச்சுனரேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதைநாயகமே
கொம்பனையேயுந்தனுக்கு குறக்கூடைவேண்டுமல்லோ
கோபாலரைநினைந்தால் வருமென்றார்கூடையது
அப்போதுதுரோபதையாள் ஆயரைக்கைதொழுவாள்

குறம்.

துரோபதை மாயவரைக் கூடைகேட்பது.

தினதெந்தின தினதெந்தின தினதெந்தின தினன
தென்னதி நாதினன தினதெந்தின தினன

மகாதேவர்மைத்துனரே மாயவரேசுவாமி-ஐயா
வைகுந்தவாசகரே வந்தெனக்கு அருளும்

அண்டமளந்தவரே அனந்தரூபா-சுவாமி
ஆதிநாராயணரே வந்தருளவேண்டும்
நரசிம்மவதாரங்கொண்ட ராமபத்திரசுவாமி
இலட்சுமிக்குமணவாளா வந்தருளவேண்டும்
இரணியனைமார்பிளந்து வகுந்துதிரங்குடித்தீர்
ஈரேழுலகமெல்லாம் நிறைந்தவரேவாரும்
இராவணனையுடல்பிளந்து சீதைசிறைமீட்டீர்-சுவாமி
நலமானவிபீஷணர்க்கு பட்டமதுதந்தீர்
அன்றொருநாள்திரியோதிரன் சபைதனிலேநானும்
அலரும்போதெக்கனுக்கு துகிலாடைதந்தீர்
இன்றொருநாளெந்தனுக்கு வந்துமிகவருளி
இசைவானகுறக்கூடை யெனக்குத்தரவேண்டும்
நினைத்தகுறிநானுரைக்க நல்லசெப்பொன்கூடை-நல்ல
நீலவர்ணமாயவரே எனக்குத்தரவேண்டும்
அவரவர்களநினைத்தகுறி நானறிந்துசொல்ல
அழகானகுறக்கூடை தந்தருளவேண்டும்
ஆறுமுகம்படைத்ததோர் வேலவரேமுருகா-சுவாமி
அம்மைவள்ளிகுறக்கூடை எனக்குத்தரவேண்டும்
தேவேந்திரனார்மகளை மணம்புரிந்தவேலா-மண
தெய்வானைகுறக்கூடை தந்தருளுஞ்சுவாமி
குறவரிடபெண்கொண்ட குமரேசமுருகா-சுவாமி
கொம்பனையாள்கூடையது எனக்குத்தரவேண்டும்
மறவரிடபெண்கொண்ட மாயவனார்மருகா-ஐயா
மாதுவள்ளிகுறக்கூடை எனக்குத்தரவேண்டும்
அக்கினியில்வந்துதித்த ஐவருக்குந்தேவி-அவள்
ஆயரையும்வேலவரையும் கைதொழுதுநின்றாள்
ஏழுலகமளந்தவரும் ஈஸ்பரனார்மகனும்-அங்கே
இருவர்களுமனமிகந்து கூடைதனையனுப்ப
வச்சிரத்தால்மாணிக்கத்தால் வாறுகட்டுங்கூடை-அது
வைடூரியமாகதத்தால் வரப்புகட்டுங்கூடை
முத்தாரத்தினபச்சைகளால் முழுதுங்கட்டுங்கூடை-அது
முழுநீலஆணிமுத்தால் அடிகள்கட்டுங்கூடை
கனத்தநல்லகுறிகள்சொல்லுங் காட்சிதருங்கூடை-அது
கைலாசஈஸ்வரனார் கடாட்சம்பெறுங்கூடை
இத்தனைக்கும்நலமான கூடைதனைஎடுத்து-அவர்

எகறவிட்டார்பாஞ்சாலி கையில்விழவென்று
அந்தச்செல்லகூடையது ஆகாயஞ்சுத்தி-அது
ஆணழகிகைதனிலே வந்துவிழுந்ததுவே

வேறு.

அப்போதுதுரோபதையாள் ஆரணங்குதான்பார்த்து
ஆதிநாராயணரை அடிவணங்கிதெண்டனிட்டு
திருக்கணிகைவேலவரைத் தீர்க்கநமஸ்கரித்து
கூடையதுவாங்கி கொம்பனையாளப்போது
வச்ரமணிகூடைக்குள்ளே வைத்தாள்பலவகைகள்
மருந்துவகைகளிலே மலைவேப்பங்கொட்டைவைத்தாள்
புலியினதுநகமும் புகழானவேர்வகையும்
நரிப்பல்நரிமுகமும் நல்லமருந்துகளும்
ஆண்வசியம்பெண்வசியம ஆனமருந்துகளும்
முதுமையுள்ளஆண்பெண்ணுக்கு யிளமைவரமருந்துகளும்
முகங்கொண்டசன்னிதிர முழுகவேப்பெண்ணெய்களும
பல்நோவுதந்தவாய்வும் திரப்பலமருந்தும்
மார்நோவுப்பித்தவாய்வும் மாளநல்லவேர்வகைகள்
வயிற்றுவலிதனக்கு ஏற்றமருந்துவைத்தாள்
கால்வலிகைவலிக்கு கனத்தமருந்துவைத்தாள்.
பட்டோலைதன்னுலே முடைந்தகிலுகிலுப்பை
ஈச்சங்குருத்தாலே யிசைந்தகிலுகிலுப்பை
தாழங்குருத்தாலே தகுந்தகிலுகிலுப்பை

கொடிக்கயிறுதாய்புக்கயிறு குழந்தைகட்கேணிக்கயிறு
அடுக்கநிலவுரிகள் அழகானசிற்றுரிகள்
பிருபணிகள்சிம்மாடு பிரப்பங்கோல்தானமைத்தாள்
எண்ணெய்குடுக்கைகளும் ஈச்சங்கோல்தாழைநாரும்
பார்த்துகுறியுரைக்க பலகாறைத்தட்டுகளும்
கண்டுகுறியுரைக்க கனத்தவேர்மூலிகையும்
இத்தனையுங்கொண்டு எடுத்தமைத்தாள்கூடையிலே
கட்டுவச்சிபோலாக பக்கத்தில்கூடைவைத்தாள்
இடைபக்கம்கூடைவைத்து வலக்கையில்கோல்பிடித்து
மாலைக்குறத்தியைப்போல் மாதுமினவெழுந்தாள்
அன்னநடைதுரோபதையாள் அசைந்துநடக்கையிலே
காண்டாவனமெரித்த காளையவர்பார்த்து
குறத்தியருகில்வந்து கோபாலர்மைத்துனரும்
குஞ்சிரிப்புகொண்டுமவர் குலுங்கநகைநகைத்து
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
சேர்த்துமவரணைத்து செங்கனிவாய்முத்தமிட்டு
காண்டாவனமெரித்த காளையவரேதுசொல்வார்
தருமரும்வீமருமே தம்பிமாரிருவர்களும்
காணவேவேண்டுமென்று கட்டழகிவாருமென்றான்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதுரோபதையும்
அப்படிக்கேநல்லதென்று ஐவர்க்குமுன்னேவந்தாள்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அருங்கிளியைத்தான்பார்த்து
சந்தோஷப்பட்டுமல்லோ சரீரங்கள்பூரித்து
நீலக்குழலாட்கு நிலங்கிள்ளிகாப்புமிட்டு
ஐவருங்கூடியல்லோ ஆரணங்குக்கேதுசொல்வார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
மலைக்குறத்திபோலே வடிவெடுத்துநீபோறாய்
போறவிடந்தனிலே பொல்லாங்குநேர்ந்தாலே
செல்லுமிடந்தனிலே தீவினைகள்வந்தாலே
ஆரைநினைத்திடுவாய் ஆரணங்கேசொல்லுமென்றார்
எவரைநினைத்திடுவாய் எங்களுக்குச்சொல்லுமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
பங்காளிசீமையிலே பங்கம்வந்துநேர்ந்தாலே
எதிராளிசீமையிலே யிழிவுவந்துநேர்ந்தாலு
மன்னர்சபைநடுவே மானத்துகிலவிழ்த்த

பாளாத்துயிலளித்த மாயர்வந்துகாத்திடுவார்
ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஆயர்வந்துகாத்திடுவார்
என்றுமவளுரைத்து ஏந்திழைபாளேதுசெய்தாள்
சகாதேவராசனை சடுதியிலேதானழைத்து
அருகில்நிறுத்தியல்லோ ஆண்டவரைக்கைதொழுதாள்
மாபலிக்குமண்ணளந்த மாயவரேநான்சரணம்
ஆனைமுறையிடவே அன்றுவந்துகாத்தவரே
காளிங்கநல்மடுவில் காளையங்கசர்ப்பத்தின்மேல்
கூத்தாடிநின்றவரே கோவிந்தாவந்தருளும்
மோகினிவேஷங்கொண்டு முக்கண்படைத்தவற்கு
காமங்களுண்டுபண்ண கரிமுகவாவந்தருளும்
மாதுநானவநந்துகையில் மாயவரேவந்தருளும்
கோனகநான்வருந்துகையில் கோபாலாவாருமையா
என்றுமவள்முறையிடவே எம்பெருமாள்தானறிந்து
கெருடன்மேலேறியல்லோ கேசவரும்வாராரே
வட்டமாங்கருடனேறி வந்துவிட்டார்மாயவரும்
பாஞ்சாலிபருகில்வந்து பாரளந்தாரேதுரைப்பார்
ஏதுக்கெனையழைத்தாய் என்பிறப்பேதங்கையரே
அழைத்தநல்லகாரியத்தை ஆணங்கேசொல்லுமம்மா
அப்போதுதுரோபதையாள் ஆயருக்கேதுசொல்வாள்
அக்கிபுரம்நான்போய் அனைவரையும்பார்க்கவேணும்
மலைக்குறத்திவேஷங்கொண்டேன் மைந்தாருகிலில்லை
கைகுழந்தைவேணுமென்றாள் கரிமேகா அண்ணாவே
இவருக்கிளையவரை அருச்சுனனார்தம்பியரை
சாயாம்பூமேனியரை சகாதேவராசனை
எனக்குக்குழந்தையாக எம்பெருமாளுண்டுபண்ணும்
கைக்குழந்தைபோலேயல்லோ கரிமேகாவுண்டுபண்ணும்
என்றுமந்தபாஞ்சாலி எம்பெருமாளைக்கேட்க
மாயர்மனமிரங்கி மைந்தர்வடிவுதந்தார்
அர்ச்சுனனார்தம்பியரை ஆண்குழந்தையாக்கிவிட்டார்
இளையசகாதேவன் ஏந்துங்குழந்தையானான்
மாயாருளாலே மைந்தன்வடிவுகொண்டான்
கோபாலர்தன்னருளால் குழந்தைவடிவெடுத்தான்
அம்போதுதுரோபதையாள் ஆயரைக்கைதொழுது
மாயர்பாதம்பணிந்து மைந்தனைத்தானெடுத்து

காட்டுக்குறத்திபைப்போல் கட்டினாள்பாலகனே
கூடையிடுக்கிவைத்தாள் குழந்தைமுதுகணிந்தாள்
கையில்பிரம்பெடுத்துக் கட்டிலச்சிபோலாக
பொன்னுமலைக்கட்டுவச்சி போலேயவள்நடந்தாள்
அன்னநடைநடந்து அருங்கிளியாள்போகலுற்றாள்
அவளன்னநடையழகைக் கண்டார்தஆணழகர்
பஞ்சவரும்மாயவரும் பார்த்துமனமகிழ்ந்தார்
காரிகையாள்நாயகியை கண்டுமனமகிழ்ந்தார்
தோராவடிவழகி துரோபதையாளப்போது
ஐவருக்கும்மாயருக்கும் அடிவணங்கிதெண்டனிட்டாள்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டாள்
ஐவர்களுந்தான்பார்த்து அழகாகயேதுசொல்வார்
காரிகையாள்துரோபதைக்கு கண்ணெச்சிலாகுதென்று
ஏழுலகமாளுகிற எம்பெருமாளப்போது
பூமியைக்கிள்ளியல்லோ பொட்டிட்டார்திரௌபதைக்கு
திருஷ்டிசுழட்டிஅவர் தெருவெங்கும்விட்டெறிந்தார்
மாயவருமிஐவரும் மனதுமிகக்குளிர்ந்து
போய்வாருமென்றுசொல்லி.புகழ்ந்துவிடைகொடுத்தார்
விடைபெற்றுபாஞ்சாலி விடுபட்டாளந்நேரம்
போறாளே துரோபதையாள் பூமணக்கவேர்பணக்க
மைந்தனைமுதுகணிந்து மயிலணையும்வாராளே
குழந்தைமுதுகணிந்து கூடையிடுப்பில்வைத்து
பிரப்பங்கோல்கைபிடித்து பெருமையுடன்வாராளே
இஞ்சிவனந்தாண்டி எலுமிச்சஞ்சோலைவிட்டு
மஞ்சள்வனந்தாண்டி மாதளம்பூச்சோலைவிட்டு
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
காரைபெருத்தவனம் காட்டுகிளாபூத்தவனம்
சூரைமுளைத்தவனம் சுண்டக்காய்காய்க்கும்வனம்
அல்லியுந்தமரையும் அடர்ந்தவனந்தாண்டி
கோகிலமுந்தாராவும் குலாவும்வனந்தாண்டி
அன்னமுந்தாராவும அசையும்வனந்தாண்டி
அத்திப்புரந்தேடி வந்தாளே ஆணழகி
தாமமுடியாளும் தயிலாட்டாலவீதிவிட்டு
கட்டழகிதுரோபதையாள் கருணாரிடவீதிவிட்டு
சாமத்துரோகியல்லோ சகுனியுடவீதிவிட்டு

நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்வீதிவிட்டு
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்வீதிவந்தாள்
அந்தத்தெருக்களிலே வாழ்கின்றமன்னரெல்லாம்
இளமைமுதுமையுள்ளோர் எல்லோருந்தான்சேர்ந்து
வயதுசென்றமன்னர்களும் வாலிபவீரர்களும
எல்லாருமொன்றாக இவளைவந்துசூழ்ந்தார்கள்
நரைத்தபழுங்களெல்லாம நாடிவந்துவதுசொல்வார்
கானக்குறத்தியரே கட்டுவச்சிநாயகமே
மலையிற்குறத்தியரே மயிலணையேநாயகமே
எங்களிடமாளிகைக்கு ஏகிவந்தாயாமானால்
வர்ணமணிமாளிகைக்கு வந்திருந்தாயாமானால்
நீ-ஆடுங்கழலாடி அம்மானார்தானாடி
பந்தாடிச்செண்டாடிப் பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் ஊஞ்சலமிகவாடி
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிபோல்வீற்றிருப்பாய்
சொக்கட்டான்சூதாடி சுகமாகவாழ்ந்திருப்பாய்
எங்களிடபெண்களை உனக்கேவல்செய்துவைப்போம்
ஆணாய்ப்பிறந்தவர்கள் ஆனபணிசெய்திருப்போம்
தேவாவமிர்தமுநீ தேவையென்றுசொன்னாலும்
கொண்டுவந்துதான்கொடுத்து கும்பிட்டுவீற்றிருப்போம்
பாலும்பழமுமுண்டு பஞ்சணையின்மேல்படுத்து
நீ-கட்டிலின்மேல்வீற்றிருந்தால் கால்பிடித்துநாமிருப்போம்
பஞ்சணைமேல்நீயிருந்தால் உன்பாதம்பிடித்திருப்போம்
மனையாளுடவார்த்தை மர்மமாய்க்கேட்டதில்லை
பெண்களுடவார்த்தை பிரியமென்றுகேட்டதில்லை
உன்சொல்லைமேலாக எண்ணிமிகநடப்போம்
உன்மனதுக்கிசைந்தபடி நடப்பேண்டிகட்டுவச்சி
வாராயோபெண்மயிலே என்றுமவாழைத்தார்
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குயேதுசொல்வாள்
மலைக்குறத்திபோலாக வாய்திறந்துவதுசொல்வாள்
கூவுங்குயில்போலே கொம்பனையாளேதுரைப்பாள்
வாய்திறந்தமன்னருக்கும் மறுவார்த்தைசொல்லுகிறாள்

குறம்.

ஏன்காணுமன்னர்களே யிப்படிக்குச்சொன்னீர்
என்குறவன்தானறிந்தால் ஏதுபிழைவருமோ

குலமன்னர்நீங்களானல் குறத்தியரைப்பார்த்து
குணங்கெடுக்கலாமோதான் கொற்றவரேகேளும்
ஐவரானகெந்தருவ ரெனக்குமணவாளர்
அவரறிந்தால்பழுதுவரும் அரசர்களேபோம்போம்
எந்தனுக்குஏவல்செய்து எனையாளவந்திர்
ஏவல்பணிசெய்வதற்கு எட்டுலட்சமுண்டு
ஏழுபேர்எந்தனுக்கு சக்களத்திமார்கள்
இன்னமுண்டென்கணவனுக்கு எண்ணத்தொலையாது
எங்களதுகுறச்சாதி ஏச்சானசாதி
எங்களுக்குமேலான அரசர்களேகேளும்
வெள்ளெலிக்கறிசமைத்து விருந்துகளைச்செய்வோம்
விஸ்தாரஆமையுடன் கீரிப்பிள்ளைதின்போம்
கொக்குநரியுடனடித்துக் கூட்டுக்கறிசமைப்போம்
கொண்டைமுசல்தான்பிடித்து கொழும்புபலசெய்வோம்
காட்டெருமைப்பன்றியுடன் கறிசமைத்துதின்போம்
கண்டகண்டமிருகமெல்லாம் உப்புக்கண்டமிடுவோம்
பெருச்சாளிதான்பிடித்து பொரியலதுசெய்வோம்
பெரும்பூனையதுபிடித்து விருந்துசெய்வோமநாங்கள்
பாம்புதின்போம்பல்லிதின்போம் பச்சோணான் சுடுவோம்
பலதினுசுமிருகமெல்லாம் பார்த்துசமைத்திடுவோம்
இன்னம்பலமிருகங்கள் எடுத்துகறிசமைப்போம்
ஏச்சானசாதியல்லோ எங்கள்குறக்கூட்டம்
நல்லகுலந்தனிலுதித்த ராசர்களுமானல்
நாட்டிலுள்ள குறத்திகள்மேலாசைவைக்கலாமோ
ஒருவன்பெண்டைமற்றொருவன நத்திவந்தானனல்
உலகளந்தார்தன்னருளால் சுவற்கமில்லையென்பார்
குருவினிடபத்தினியை குறித்துவந்தானனல்
கோபாலர்தன்னருளால் கூடுமென்பார்நரகம்
அண்ணனுடதேவிபரை அடுத்துவந்தானனல்
அரிராமர்சக்கரமே அவன்தலையையறுக்கும்
இப்படியாயுரைப்பார்கள் ஏழுலகந்தனிலே
எல்லாந்தெரிந்தவர்கள் எனைத்தொடரலாமோ
கொற்றவரேயுங்களுக்கு தேவியர்களில்லையோ
கூசாமல்உங்களிட மனையிடத்துச்சேரும்

மன்னர்களேவுங்களுக்கு மனையாளுமில்லையோ
மகாராசபிள்ளைகளே மனையிடத்திற்போம்போம்
கிறிதின்னுங்குறத்தியின்மேல் ஆசைகொண்டீர்நீங்கள்
கீர்த்தியல்லஉங்களுக்கு எழுந்துநடப்பீரே
ஆமைதின்னுங்குறத்தியின்மேல் ஆசைகொண்டீர்நீங்கள்
அதுமுறைமையல்லகண்டாய் அணுகாமல்நடவும்
என்றுமவள்மிகவுரைத்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திசாயலைப்போல் இடைதுவளநடந்தாள்

வேறு.

அப்போதுபூங்குறத்தி அழகானகட்டுவச்சி
மாலைக்குறத்தி மலைக்குறத்திபோய்நடந்தாள்
மலைக்குறத்திபோனபின்பு மன்னர்மனந்தளர்ந்து
நெஞ்சுலர்ந்துநாவறண்டு நினைவுதடுமாறி
அவரவர்கள்தொழில்மறந்து அசந்துநடைநடந்து
சாதிதொழில்மறந்து தானேநடக்கசைந்தார்
பூசைதொழில்மறந்தார் புஷ்பமெடுக்கசைந்தார்
இருந்தயிடமொழிப எழுந்துநடக்கறியார்
கானக்குறத்தியினால் காமம்பெரிதானார்
மாலைக்குறத்தியினால் மையல்பெரிதானார்
வாய்ப்பேச்சுத்தான்குளறி மயங்கிவிழுந்தார்கள்
தங்கள்நினைவுகெட்டுத் தான்படுத்தார்பூமியிலே
இப்படியாகவல்லோ யிவரிருக்கும்வேளையிலே
அப்போதுபூங்குறத்தி அந்தத்தெருதாண்டி

கருணன்விதி வருகிறது.

கருணருடவீதியிலே கட்டுவச்சியேதுசொல்வாள்
வாறதொருபூங்குறத்தி மயில்போலேவாய்திறந்து
கூறுவாள்கட்டுவச்சி கொம்பின்கிளியதுபோல்
இவ்விதிவாழுகிற இளமையுள்ளபெண்களே
கைபார்த்துக்கொள்ளலியோ கனத்தகுறிகேட்கிலையோ
பச்சையதுகுத்திக் கொள்ளலியோபைங்கிளிகாள்
உரிகயிறுவாங்கலியோ ஊஞ்சற்கயிறுகொள்ளலியோ
தாம்புக்கயிறுகொள்ளலியோ தார்வேந்தர்வீதியிலே
ஓலைசிலுகிலுப்பை கொள்ளலியோபிள்ளைகட்கு
ஐங்காயத்தூளதுதான் வாங்கலியோஆச்சியரே

பல்நோவுக்காரருக்கு பச்சிலைகள்கொள்ளவியோ
தாள்நோவுக்காரருக்கு தான்மருந்துகொள்ளவியோ
இப்படியாய்க்கூறிடல்லோ வாறுளேகட்டுவெச்சி
அப்பெரியவீதியிலே வாழுமனிதரெல்லாம்
சிறியோர்கள்பெரியோர்கள் சேர்ந்தொருபுறமாய்
வாலைப்பிராயமுள்ள ராசரெல்லாந்தான்பார்த்து
காமக்குறத்தியரை கண்டுமயலானார்
பாவைகுறத்தியரை பார்த்துமிகமயங்கி
குறத்தியழகைப்பார்த்து கொற்றவர்களேதுசொல்வார்
கண்டீரோமன்னர்களே காமக்குறத்தியரை
பார்த்தீரோராசர்களே பாவையழகுதன்னை
இப்படியாய்பெண்களை எங்கிலும்நாம்கண்டதில்லை
தெய்வலோகம்வாழுகின்ற இந்திராணியிடல்லவே
இராமருடதேவி சீதைஎதிரல்லவே
அகலிகைவண்டோதரி யாருமெதிரல்லவே
இரம்பைஊர்வசியும் நல்லதிலோர்த்தமையும்
தானிபமாலிபரும் சகுந்தகருணாவதியும்
இந்தக்குறத்தியற்கு ஈடுசொல்லலாகாது
காமக்குறத்தியற்குக் கட்டுரைக்கலாகாது
இவளழகும்பாவனையும் எங்கிலுங்கண்டறியோம்
திருவழகுமொப்பனையும் தேசதிலகண்டறிவோம்
இப்படியாய்ச்சொல்லியல்லோ எல்லவருமோடிவந்தார்
மாலைக்குறத்தி மலைக்குறத்திமுன்னேவந்தார்
கானக்குறத்திமுன்னே வந்துமவளேதுசொல்வார்
ஆரோடிகட்டுவெச்சி அன்னமேபூக்குறத்தி
எவளோடிகட்டுவெச்சி இந்தத்தெருவில்வந்தாய்
உன்னழகைக்கண்டலவோ உருகுதடியெங்கள்மனம்
உன்வடிவழகைக்கண்டலவோ மயங்கித்தவிக்கிறோம்
எங்களுடமாளிகைக்கு வந்தாயேயாமானால்
கட்டநல்லபட்டுமுண்டு கழற்றப்பணிதியுண்டு
போடவுடைமையுண்டு பூட்டப்பணிதியுண்டு
அத்தருண்டுபுட்பமுண்டு அதற்கேற்றகட்டிலுண்டு
பூசப்புனுகுமுண்டு புகழானகந்தமுண்டு
அன்னவுஞ்சல்மேலே ஆடலாமெப்போதும்
உன்னைப்பிரியாமல் உகந்துவிளையாடிருப்போம்

ஏவல்பணிசெய்து எப்போதும்வீற்றிருப்போம்
ஏன்காணுர்கட்டுவச்சி இளங்குறத்திநாயகமே
வாராயோஎங்களுட வர்ன்னமணிமாளிகைக்கு
என்றுமவர்கேட்க இளங்குறத்திகட்டுவச்சி
மலையாளப்பூங்குறத்தி மன்னவருக்கேதுசொல்வாள்

குறம்.

ஏன்காணுமன்னர்களே இடக்குகளைச்சொன்னீர்
இந்நாட்டில்வாழுகின்ற குறத்தியல்லநானும்
பலசாதிக்குறத்தியைப்போல் எண்ணியேதானுரைத்தீர்
பரமசிவன்பார்வதிக்கும் கைபார்க்குங்குறத்தி
கானகத்தில்வாழுகின்ற குறத்தியைப்போல்நினைத்தீர்
கந்தருக்கும்வள்ளிபற்கும் கைபார்க்குங்குறத்தி
இந்நாட்டில்வாழுகின்ற குறத்தியல்லநானும்
இந்திரற்குந்தேவியற்குங் குறியுரைக்குங்குறத்தி
என்னையுந்தெரியாமல் அனியாயஞ்சொன்னீர்
இந்நாட்டுக்குறத்தியல்ல பிசைக்கநடப்பீரே
என்குறவனவர்கண்டால் இப்பொழுதுதன்னில்
இந்தக்கணமுங்கள்மண்டை உருளஅடித்திடுவார்
குறவருடகூட்டமெல்லாம் அடிபோடவந்து
கொற்றவனார்சீமைதனைச் சுட்டெறிக்கப்போருர்
குறச்சாதியென்சாதி இழிவானசாதி
கொற்றவரேநானுமக்கு கிட்டுமோதான்சொல்லும்
குறநாற்றமுங்களுக்கு குமட்டியடியாதோ
கொம்பனையாள்மேலாசை தோன்றுதோதான்சொல்லும்
கருணைருடவீதிதன்னில் அதர்மங்களுண்டாச்சோ
கட்டழகர்கூடியேயென் கைபிடிக்கவந்தீர்
கருணாரிதைத்தானறிந்தால் கடுப்பகைகள்நேரும்
காளைகளேயுங்களுக்கு குடிப்பழுதுவருமே
இச்சையுடனிந்தெருவில் பிச்சைக்குநான்வந்தேன்
பிச்சைக்குநான்வந்தவளைப் பெண்டழைக்கலாமோ
சமுசாரியானவளைத் தேடியேபெண்டழைத்தால்
தன்குடிக்குப்பழுதுவரு மென்றெண்ணிடவும்
ஒருவனிடந்தேவிதன்னை ஒருவன்நத்தியழைத்தால்
உடனேஅவன்தன்தலைக்குப் பழுதுவருமென்றார்

பிறருடையபெண்டுகளைப் பேதப்படநினைத்தால்
பெருநரகம் அடைவாரென்று பெரியோர்கள்சொல்வார்
இப்படியாயுலகுகளில் அழிந்துபோனமாந்தர்
எத்தனையோகோடியுண்டு எனக்குத்தெரிந்தளவு
ஸ்ரீராமர்தன்னுடைய தேவியருளாலே
தென்னிலங்கைராவணனும் க்ஷணத்தில்மடிந்தானே
அகலிகைமேற்காதலுற்று ஆயிரங்கண்ணுடையோன்
அவளாசைதன்னாலே பூனையைப்போல்நடந்து
உள்நுழையும்வேளையிலே கௌதமருங்கண்டு
ஒப்பாதுமனங்கொதித்து மெய்ப்புடனேயவரும்
தேவேந்திரனென்றறிந்து சிறிபந்தமுனியும்
சீக்கிரமாய் அவன்கேட்க வாக்குரைத்தாரவரும்
இந்திரன்தன்தேகமெல்லாம் யோனியாகவென்று
இட்டாரேபெருஞ்சாபம் எல்லையுடைறிய
கௌதமர்சாபத்தினால் இந்திரனும்நொந்து
கிலேசங்கொண்டு அவருடைய பாதத்தில்விழுந்தான்
சாஷ்டாங்கதெண்டனிட்டுச் சரணமென்றுபணிந்து
சுவாமியெனைக்காருமென்று மிகவணங்கியுரைத்தான்
என்றுமிவன்தானுரைக்க கௌதமருமிரங்கி
இந்திரனார்தேகமெல்லாம் விழியாகவென்றார்
அன்றுமுதலின்றளவு கௌதமனாருரையால்
ஆயிரங்கணிந்திரனா ரென்றுசொல்லுமுலகம்
தேவேந்திரன்போனபின்பு கௌதமனார்தாமும்
தேவியரைத்தானழைத்து மிகவுரைப்பாரவட்கு
ஏண்டிபெண்ணே அகலிகையே இந்தமதியுனக்கு
இந்திரன்தன்மேலாசை கொண்டிருந்தாயென்றார்
அந்தவுரைகேட்டுமவள் பயந்துமிகத்தியங்கி
ஆண்டவனேநான்செய்த குற்றமதைக்கேளும்
நித்திரையாலெனக்கு நினைவுதடுமாறி
நீரென்றுமவனென்றும் நானறியேனென்றாள்
என்றுமிவள்தானுரைக்க கௌதமருங்வெகுண்டு
இவளையொருகற்பாறை யாகவென்றுசபித்தார்
இட்டதொருசாபத்தினால் அகலிகையும்பார்த்து
இவருடையபாதமதில் மிகநொந்துவிழுந்தாள்
ஆண்டவரேயென்குருவே ஐயாவேசுவாமி

அடியவள்நான்செய்தவொரு குற்றம்பொறுத்தருளும்
இட்டவொருபெருஞ்சாபம் எப்பொழுதுதீரும்
எந்தனுக்குவுரையுமெனமுனிநோக்கிப்பணிந்தாள்
என்றுமவள்தானுரைக்க மிகமனதில்மகிழ்ந்து
ஈரேழுவுலகமெல்லாம் ஆளுந்தசரதனால்
ஸ்ரீராமர்தசரதருக்குப் புத்திரராய்ப்பிறந்து
செல்வமுள்ளபனிரெண்டு வயதுடையநாளில்
இராசரிஷியானவரும் யாகமதுவுரைத்து
தசரதனார்தன்னருகில் தேடியவர்வந்து
ஸ்ரீராமலக்ஷ்மணரை அனுப்பவென்றுகேட்க
தசரதனுந்தான்மகிழ்ந்து ஸ்ரீராமர்தம்மையும்
தம்பியெனும்லக்ஷ்மணரை யிருவரையுமனுப்ப
இராசரிஷிமனமகிழ்ந்து நலமாகநடந்தார்
இராகவரும்லக்ஷ்மணரும்கூடவேதான்தொடர்ந்தார்
இராசரிஷிதன்னுடனே மூவருமாய்வந்து
இராமருடன்லக்ஷ்மணரும் வாசஞ்செய்தாரங்கே
இவரிருக்கும்வேளையிலே தாடகையும்வந்தாள்
இவளாரெனவுரைத்தார் ஸ்ரீராமர்தானும்
எடுத்துரைப்பாரன்னேரம் இராமருக்குரிஷியும்
என்னுடையயாகமதை கலைக்கவந்தபேடை
இவளுயிரைவாங்குமென்று உரைத்தாரந்தரிஷியும்
குருவுரைத்தவாக்யமதை கோபாலரறிந்து
கோப்பணவேவில்லெடுத்து குணத்தொனியேசெய்து
தாடகையைவிழவடித்து அவள்தனயரிருவர்
தன்னிலிளையோனுயிரைத் தான்வதைத்துநடந்தார்
விஸ்வாமித்திரர்தன்னுடனே வேண்டியிருவோரும்
விஸ்தாரமானதொரு வழிகடந்தார்மூவர்
மிதிலைப்பதிநோக்கியல்லோ வருகின்றவழியில்
மிதித்தாரே அகலிகையாள் கற்பாறைதன்னை
பாதம்பட்டவுடனே அவள் மேதினியிலெழுந்து
பத்தியுடன்சுத்திசெய்து நமஸ்கரித்தாளவளும்
இராகவருந்தான்பார்த்து இவளாரென்றுரைக்க
இராசரிஷியானவரும் இராமருக்குவுரைத்தார்
அப்போது அகலிகையும் அண்டமெல்லாம்புகழ
ஆனந்தமாகவந்து கௌதமரைப்பணிந்தாள்

அகலிகையுங்கௌதமரும் கூடிமிகவாழ்ந்து
ஆதித்தர்போலுஞ்சில பிள்ளைகளும்பெற்றார்
இப்படியாயுலகுதனில் எத்தனையோகோடி
எத்தனைப்பெண்டழைக்கவந்தீர் மன்னர்களேபோம்போம்
ஆறுலேகெட்டவர்கள் ஆருமில்லையுலகில்
அவகேடுபெண்ணாலே வருமென்றுசொல்வார்
இப்படிக்குத்தானுரைத்து யிடைதுவளநகைத்தாள்

வேறு.

குறத்தியவள்போனபின்பு கொற்றவர்கள்எல்லாரும்
மாதுமயலாலே வாடிமனந்தளர்ந்து
தையல்மயலாலே கண்கள்முகம்வாடி
காமன்கணையாலே களைபட்டுப்போய்விழுந்தார்
நினைவுதடுமாறி நெஞ்சுலர்ந்துவாயுலர்ந்து
படுத்தபடுக்கையிட்டார் பார்மன்னர்எல்லவரும்
குறத்தியவளாலே கொற்றவர்போய்படுத்தார்
மலைக்குறத்திதன்னாலே மாதைமறந்தார்கள்
கட்டுவச்சிதன்னாலே கைகாலசந்தார்கள்
தங்களதுதேவிகளைத் தான்மறந்தார் அப்போது
ஒருவர்பேருரைப்பார்கள் மறுபேரழைப்பார்கள்
உணவுதடுமாறி உற்றசிவன்தான்குலைந்தார்
நினைவுதடுமாறி சித்திலங்கும்பூமுடியார்
திண்டிமறந்து தெருத்திண்ணைபோய்படுத்தார்
குறத்திகுறத்தியென்று கொற்றவர்கள்தாமிருப்பார்
மலைக்குறத்திவந்தாளென்று மன்னவெழுந்திருப்பார்
கட்டுவச்சிவந்தாளென்று கண்ணெடுத்துப்பார்த்திருப்பார்
குறத்திதலைமயக்கங் கொண்டலைவாமன்னரெல்லாம்
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே

திரியோதனன்வீதி வருகிறது.

மாலைக்குறத்தியவள் மலைக்குறத்திகட்டுவச்சி
வேலைப்பழுத்தகொரு விழிப்பாள்நடக்கலுற்றாள்
தேசத்தையாளுமந்த துரியோதனன்வீதியிலும்
நாலால்கடுத்திளார் நாற்றெருருவர்வீதிவந்தாள்
வாராள்குறத்தியவள் மயில்போலேவாய்திறந்து
கூறுவாள்கட்டுவச்சி கொம்பின்கிளியதுபோல்

உரிகயிறுவாங்கலியோ உத்தமிபார்பெண்களா
தாம்புக்கயிறுகொள்ளலிலோ தார்வேந்தர்பெண்களா
மாப்பிள்ளைக்கேற்ற மருந்துண்டுகொள்வீரோ
புருஷருக்கேற்ற பொடியுண்டுவாங்குவீரோ
என்றுமவள்கூறியல்லோ வாராளேகட்டுவச்சி
துரியோதனன்வீதியிலே சிலமன்னர்தான்பார்த்து
காமக்குறத்தியரைக் கண்டுமயலாகி
இவளார்காண்கட்டுவச்சி இவ்வீதிவந்தவள்தான்
கட்டுவச்சிபோழகைக் கண்டீர்களோமன்னர்களே
இந்நாட்டின்குறத்தியல்ல இவ்வீதிவந்தவள்தான்
மேல்நாட்டில்தான்வாழும் குறத்தியைப்போல்காணுகுது
கந்தருவர்தேவர்களோ காமனுட பத்தினியோ
தேவேந்திரனுடைய திருவுளத்தால்வந்தவளோ
ஈஸ்வரனார்தன்னிடத்தில் இருக்குங்குறத்தியரோ
பார்வதியாளம்மனுக்கு பார்த்துகுறிசொல்பவளோ
மகாவிஷ்ணு தன்னுடைய மனதுகுறிசொல்பவளோ
இலட்சுமியாள்தன்றனக்கு நேர்ந்தகுறிசொல்பவளோ
அயன்பிரமதேவனுக்கு ஆனகுறத்தியரோ
சரஸ்வதிநாயகிக்கு சகலகுறிசொல்பவளோ
மயிலேறும்வேலவற்கு மனதுகுறிசொல்பவளோ
தெய்வயானைவள்ளியற்கு தேர்ந்துகுறிசொல்பவளோ
இவளழகைப்பார்ப்பதற்கு இருகண்கள்போதாது
புத்தகத்தைமாத்தடிக்கும் புறங்காலின்வடிவழகும்
பூஞ்சிலம்புதண்டைகளும் புலம்புந்நடையழகும்
முத்துச்சிப்பிதன்னிறம்போல் முழங்காலிரண்டழகும்
ஈனுதவாழை இளவாழைத்தண்டதுபோல்
இளவாழைத்தண்டதுபோல் திரண்டதுடையழகும்
ஆலிலைபோலே அமைத்தவயிறழகும்
குஞ்சரத்தின்மத்தகம்போற் குப்பஸ்தனத்தழகும்
கோர்த்தமுத்திலேதளர்ந்த கொங்கையிரண்டழகும்
முருக்கம்பூபிதழதுபோல் உதட்டழகும்பாவனையும்
முத்தணிந்தபல்லும் முகத்தழகும்ஒப்பனையும்
வட்டமுகமும் மகராசிதன்னிறமும்
வண்ணத்திருத்தோளும் கோர்த்தபணியழகும்
அவனிபதினாலு லோகந்திரிந்துவந்தோம்

இளமுறைக்கொப்பானோர் யாருமுலகிலில்லை
என்றுமிவர்கள்சொல்லி இவளைவந்துசூழ்ந்தார்கள்
குறத்தியருகில்வந்து கொற்றவர்கள்ஏதுசொல்வார்
வாடிகுறத்திஎங்கள் வர்ணமணிமாளிகைக்கு
கால்பிடிப்போம்கைபிடிப்போம் கனத்தபணிசெய்திடுவோம்
வேண்டியுனைத்தொழுது வேலைபணிசெய்திருப்போம்
ஆணாப்பிறந்தவர்கள் அடப்பங்கட்டிநின்றிடுவோம
பெண்ணாப்பிறந்தவர்கள் வேணதொழில்செய்திடுவோம்
ஆராங்காயநீராடி அம்மானைதானாடி
பந்தாடிச்செண்டாடிப் பள்ளாங்குழியாடி
ஓலைக்காலமண்டபத்தில பைங்கிளிபோல்வீற்றிருப்பாய்
பளிங்குமாமண்டபத்தில் பாங்காகவீற்றிருப்பாய்
உந்தன்மேலாசைகொண்டு வுழன்றுதிரிகிறோமே
பூங்குறத்திஉன்னாலே பெண்டுபிள்ளைதானமறந்தோம்
அருமைகுறத்தியுன்னாலே அண்ணன்றம்பிமாரைமறந்தோம்
உன்னாசைகொண்டுமல்லோ சன்னாசியானோமே
தாயைமறந்தோமடி சகலரையுந்தான்மறந்தோம்
வாடிகுறத்தியென்று மையல்கொண்டார்மன்னரெல்லாம்
அப்போதுகுறத்தியவள் அருங்கிளிபோலவாய்திறந்து
மன்னர்முகம்நோக்கி மலைக்குறத்தியேதுசொல்வாள்

குறம்.

வாடிஎன்றும்போடிஎன்றும் வழிமறித்துயென்னை
வம்புதும்புஞ்சொல்லவந்தீர் மன்னர்களேபோம்போம்
நூற்றொருவர்வீதியிலே வேற்றுமைதானுண்டோ
திட்டமறியாமலென்னை சொற்பமென்றுமதித்தீர்
கலியாணஞ்செய்யவில்லையோ காளைகளேயுமக்கு
கன்னிகுறத்தியின்மேல் மையல்கொண்டீர்கள்
ஒழியாதநரகமெல்லாம் மறைநூலிலசொல்லும
அண்ணன்றம்பிதேவியர்மேலாசைகொள்வாரானால்
ஆகாதநரகத்தனில் அழுந்திடுவார்மாந்தர்
குருவினதுபத்தினியை ஆசைகொண்டாலல்லோ
கொள்ளாதநரகமதில கூடியழுந்திடுவார்
இப்படியாயுலகுதனில் அழிந்தவர்கள்கோடி
இருமுடங்கொண்டவர்போ யிடைக்காட்டப்பீர்கள்

என்றுசொல்லிபூங்குறத்தி மிகநோக்கிநடந்து
இடைகுலுங்கத்துடைகுலுங்க நடைநடந்தாள்குறத்தி

வேறு.

குறத்தியவள்போனபின்பு கொற்றவர்களெல்லோரும்
வாடிமனந்தளர்ந்து வண்ணமுகம்வேறுபட்டு
வார்த்தைகுளறியல்லோ மறுவேடமானுர்கள்
முக்காடுபோட்டு முடிமன்னர்பள்ளிகொண்டார்
பெண்டுபிள்ளைதான்மறந்து பூமியின்மேல்தான்படுத்தார்
மாதுமயக்கம் பெரிதாச்சுமன்னவற்கு
குறத்திமயக்கம் பெரிதாச்சுகொற்றவற்கு
கன்னிமயக்கமல்லோ தலையெடுக்கப்போகாது
அன்னமுந்தண்ணீர் அருந்தார்கள்மன்னவர்கள்
ஒருவருடன்பேசாமல் உத்தமர்கள்வீற்றிருப்பார்
இப்படியாகவல்லோ யிவரிருக்கும்வேளையிலே
மாலைக்குறத்தி மலைக்குறத்திபோய்நடந்தாள்
வாராளேபூங்குறத்தி மாதர்கள்வீதியிலே
பாடிவருகிறுள் பத்தினியாள்வீதியிலே
குறம்பாடிவாராளே கொம்பனைமார்வீதியிலே
கைபார்த்துக்கொள்ளலியோ பச்சைபொட்டுகுத்தலியோ
குறியொன்றுங்கேட்கலியோ கொம்பனைமார்பெண்டுகளே
கூடாதபெண்களுக்கு கூட்டிவைக்கமருந்துகொள்வீர்
சேராதபெண்களுக்கு சேரமருந்துமுண்டு
வாழாதபெண்களுக்கு வாழமருந்துண்டைகொள்வீர்
யுத்தம்விலக்கவென்றல் மெத்தமருந்துமுண்டு
சண்டைகெலிப்பதற்கு சார்ந்தகுளிகையுண்டு
எதிரிமயங்கவல்லோ என்கைமருந்துமுண்டு
நரைத்தகல்லகூந்தலது கறுக்கமருந்துமுண்டு
தளர்ந்தஸ்தனம்நிமிற தகுந்தமருந்துமுண்டு
என்றுமவள்பாடி இளங்குறத்திவாராளே
மாநகரமாளுகின்ற மகராஜன்தேவியரும்
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்மாளிகையில்
நூற்றெருவர்பெண்டுகளும் வேற்றுமைகளில்லாமல்
சொக்கட்டான்சூது சதுரங்கந்தானுடி
அம்மானுர்பந்து அழகுகழலாடி
ஊராங்காய்தானுடி ஆலித்துச்செண்டாடி

பந்தாடிசெண்டாடிப் பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் ஊஞ்சலுதைத்தாடி
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிமார்வீற்றிருந்தார்
கொம்பனைமார்களெல்லாம் கூடிவிளையாடினார்கள்
வோரகத்திமார்களெல்லாம் ஒருமித்துஅங்கிருந்தார்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
வீதியில்பாடியல்லோ வருங்குறத்திசேதிசொல்வோம்
பெருந்திருவாள்தேவியற்குப் படிவாசல்காத்திருக்கும்
வாசற்படிகாக்கும் மயிலிணைமார்தாதியர்கள்
குறத்திவருமழகைப் பார்த்தந்தகொம்பனைமார்
ஒருத்திக்கொருத்தி யுறவாகியேதுசொல்வார்
கண்டீரோஅக்கமாரே கட்டுவேச்சிபேரழகை
பார்த்தீரோதங்கைமாரே பூங்குறத்திதன்னழகை
சாய்ந்தநடையழகும் சதுரானகைவீச்சும்
ஒப்ந்தநடையழகும் உருட்டிவிட்டபார்வைகளும்
கோர்த்தகழுத்தழகும் கொண்டையின்மேல்பூவழகும்
தருந்தசவுளிகளும் தாள்பூட்டுச்சங்கிலியும்
முன்கைமுதாரிகளும் மோதிரம்பொன்னுருட்டுகளும்
தங்கப்பதக்கமும் தகதகெனமின்னிவர
மார்பில்சரப்பளியும் தோளில்புரண்டாட
அக்குமணிதாவடங்கள் ஆபரணஞ்சோதிமின்ன
பச்சைமணியழகும் பலகாறைத்தாவடமும்
இந்தக்குறத்தியரின் இணையழகுகண்டீரோ
இந்நாட்டாளல்லவிவள் இத்திசையும்அல்லவென்றார்
தென்னாடும்சூழவல்லோ தீவிலிருந்தவள்காண்
தெய்வக்குறத்தியிவள் தெளிவறிந்தகட்டுவச்சி
நினைந்தகுறியுரைப்பாள் நிலமையுள்ளபூங்குறத்தி
ஆச்சியரண்மனைக்கு அழைத்துமெள்ளச்சென்றாலே
கட்டழகிமாதரெல்லாம் கைகாட்டிகுறிகேட்பார்
என்றுசிலதாதியர்கள் எழுந்திருந்துஉள்நுழைந்து
அரண்மனைஎழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்முன்னேவந்து
செம்பொன்திரைநீக்கி சேரவந்துதெண்டனிட்டு
அம்பொன்திரைநீக்கி அழகாகத்தெண்டனிட்டு
தெண்டனிட்டுத்தாதியரும் சேரஎழுந்திருந்து

மோதிரமின்னலல்லோ முடிமேலேகைதொழுதாள்
பேடைமயில்கண்ணாளும் பெருந்திருவாள்தான்பார்த்து
(நீ) யார்பெண்ணேதாதி அறியவுரையுமென்றார்
எவர்பெண்கள்தாதி எனக்குறியக்கூறுமென்றாள்
தாதியவள்கேட்டு தையலற்குவதுசொல்வாள்
ஆர்பணியுமல்லநான் அடியேனுமுன்பணிதான்
பெரியோருடைய பெருமாளேவுன்பணிதான்
மாநகரமாளுகிற மகாராசர்சொற்படிக்கே
உங்களதுவிதிப்படி காக்கிறதாதியென்றாள்
போரால்மிகுத்ததொரு பெருந்திருவாள்தான்கேட்டு
நீயிங்கேவந்ததொரு காரணத்தைச்சொல்லுமென்றாள்
எதுக்காய்வந்தாய்நீ எனக்கறியக்கூறுமென்றாள்
தையலுரைகேட்டுத் தாதியருமேதுசொல்வாள்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னாச்சிநீர்கேளும் இன்னமொருவார்த்தை
காணாவதிசயங்கள் கண்டுவந்தேன்வீதியிலே
பாராவதிசயங்கள் பார்த்துவந்தேன்வீதியிலே
தேசத்தையாளுகின்ற திரியோதிராஜன்
எவர்க்குமொருஆண்டு எனக்குமொருமூவாண்டு
வாளெடுத்துக்கைகொடுத்து வாசலிலேநில்லுமென்றார்
வாள்கொடுத்தநாள்முதலாய் வுன்வாசல்காத்திருந்தேன்
அன்றொருநாளின்றளவும் அணிவாசல்காத்திருந்தேன்
மண்டலத்துபெண்களெல்லாம் வாராதபேர்களிலை
சீமையிலுள்ளபெண்கள் சேனைபெண்கள்வந்திருப்பார்
பட்டமாசாளும பத்தினிமார்வந்திருப்பார்
அந்தரத்துப்பெண்கள் அனேகம்பேர்வந்திருப்பார்
மேலோகம்வாழுகின்ற மெல்லியர்கள்வந்திருப்பார்
பிச்சைக்குவந்தவர்கள் பேர்சொல்லமாளாது
இரக்கவென்றுவந்தவர்கள் எத்தனையோகோடியுண்டு
குறிசொல்லவந்தவர்கள் கோடானகோடியுண்டு
இப்படிக்கொற்றதொரு குறத்தியைநான்கண்டதில்லை
காணக்கிடையாது கன்னியிளங்கொடியாள்
பார்க்கக்கிடையாது பத்தினியாள்கட்டுவச்சி
இதுபுதுமைகண்டல்லோ சொல்லவந்தேனுந்தனுக்கு
அழைக்கத்திருவுளமோ ஆச்சியெனதெண்டனிட்டாள்

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள் தான்கேட்டு
ஓரகத்திமார்கள்முகம் உற்றுமவள்பார்த்து
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்ஏதுசொல்வாள்
மாதுகுறத்தியரை வரவழைக்கவேண்டுமோதான்
சம்மதியுண்டானால் தங்கையர்கள் சொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அனைவோருஞ்சம்மதித்து
தாதிமுகம்நோக்கி தையலர்கள் ஏதுசொல்வார்
கன்னிகுறத்தியரைக் கடுக அழையுமென்றார்
மாதுகுறத்தியரை வரவழைத்துவாருமென்றார்
அந்தவுரைகேட்டு அணங்குதாதியவள்
எட்டியுமோரடியாய் விட்டுவி நடந்து
பத்தடியுமோரடியாய் பதறிவழிநடந்து
ஒட்டப்பெருநடையாய் ஓடிவந்தாள்வீதியிலே
கட்டுவச்சிமுன்னேவந்து கன்னியருமேதுசொல்வாள்
குறத்திபெதிரில்வந்து கொம்பனையாளேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மாளிகைவாசலுக்கு
நாலாலகடுத்திமளார் நூற்றொருவர்தேவிகட்கும்
பார்த்துக்குறியுரைத்தால் பாக்கியங்கள்தந்திடுவார்
கண்டுகுறியுரைத்தால் கனகமணிதான்கொடுப்பார்
வருகிறையோகட்டுவச்சி மாளிகைக்குளென்றழைத்தாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தமலைக்குறத்தி
நல்லதென்றுசம்மதித்து நடந்தாளேகட்டுவச்சி
அடிசிலம்பும்பாடகமும் அசையவேநடந்தாள்
தண்டைசிலம்பசைய தானடந்தாள்கட்டுவச்சி
ஆடைபொதுக்கியவள் அசைந்துவழிநடந்தாள்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்மாளிவந்தாள்
அரண்மனைஏழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்மாளிவந்தாள்
மண்டபத்தின்வழியாக வந்திருந்தாள்பூங்குறத்தி
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்
தாமக்கருங்குழலாள் தாதியரைத்தானழைத்து
குறத்தியவள்வீற்றிருக்க குருஞ்சிமணைபோடுமென்
மலைக்குறத்திவீற்றிருக்க வட்டமணைபோடுமென்று
அந்தவுரைகேட்டு அழகானதாதியர்கள்
ஏலக்கருங்குழல்மார் இட்டார்கள்வட்டமணை

கோலவர்ணக்கட்டுவெச்சி கூந்துமம்மாவென்றுரைத்தார்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவெச்சி
காலமடித்துபபூங்குறத்தி கைக்கூடைமுன்னேவைத்து
ஒருகால்மடித்துமவள வொருகால்பிாகணேந்து
பிரப்பங்கோல்கைபிடித்து பெருந்திருவாட்கேதுசொல்வாள்

குறம்.

நன்மையுண்டியுன்மனைக்கு நான்வருதலாலே
நாடாளும்ராசருக்கும் பத்தினியேகேளும்
தலைக்குயாம்கெவுளிநின்று சொன்னதினாலம்மே
தனக்குவரும்செல்வங்களில சொல்லமுடியாது
மார்தனக்குநோாக மனைகெவுளிசொன்னால்
மலைராமர் அருளாலே சந்தோஷமுண்டாம்
பெண்டுகளானவற்கு யிடதுபக்கந்துடித்தால்
பூமிபரசாள்வதற்கு பிள்ளைபெருவார்கள்
மற்றுமுள்ளவலதுபக்கம் மங்கையற்குத்துடித்தால்
மாராமலபெரிடிகள் வளைந்துமல்லோவருமே
ஆணைப்பிறந்தவர்க்கு வலதுபக்கம்துடித்தால்
அனறவட்டாநாளையிலே அரசுநிலையாள்வார்
கனத்தகொருயிடதுபக்கம் காளைகட்குத்துடித்தால்
காசினியில்வாழாமல் கைலாசம்சேர்வார்
இப்படியாயுலகுதனில் சொல்லுகிறார்பெரியோர்
எண்ணயழைத்தகாரியங்கள் உரையுமென்றாள்குறத்தி

வேறு.

அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாளேதுசொல்வாள்
எந்தனுடுங்களுக்கு யிருப்பிடத்தைச்சொல்லுமென்றாள்
வாய்திறந்துகட்டுவெச்சி மயிலனையாளேதுசொல்வாள்

குறம்.

எந்தனதுநாடுதனை கேட்கவந்தாயம்மே
இருப்பிடத்தைச்சொல்லுகிறேன் விருப்பமுடன்கேளும்
ஆதியென்றகைலாசம் நாதாருளாலே
ஐங்காரனார்தன்னருளால் அம்மையுமையருளால்
இந்தநாடெங்களதுதென்னாடு அம்மே
இந்திரரும்சூரியரும் இருக்குமெங்கள்நாடு

சூரியரும்சந்திரரும் சூழ்ந்திருக்கும்நாடு
சுத்தமுள்ளபெரியோர்கள் தவம்புரியும்நாடு
அந்தணர்கள்வேதியரும் அழகானமுனிவர்
அனைவோரும்சதாகால தவம்புரியும்நாடு
மந்திரங்கள்சாஸ்திரங்கள் மறையோதும்நாடு
மறவாமல்மூவரையும் துதிக்குமெங்கள்நாடு
கன்னிபிராமனெங்களுக்கு குருபீடமம்மே
காளியம்மையாளுவதும் எங்களதுநாடு
ஆயரவரெந்தனுட வுடன்பிறந்ததமையன்
அவருடையதுவாரகைதான் எந்தனதுநாடு
இந்திரனூர்யெந்தனது மாமனல்லயம்மே
எப்போதும்தெய்வபதி நாங்கள்அரசாள்வோம்
மேகவர்னன்எந்தனுக்கு சிறுதகப்பனம்மே
மெய்யானஅவர்பதியை நாங்கள்அரசாள்வோம்
நாகராஜன்என்தகப்பன் நாயகமேகேளும்
நாகலோகமெல்லாமும் நாங்கள்அரசாள்வோம்
அந்தணராளுகின்ற பூமியெல்லாமுழுதும்
அடங்கலுநாமரசாள்வோம் ஒருவரெதிருண்டோ
தென்மதுரைசொக்கலிங்கம் என்தகப்பனம்மே
தேவருடமணிபுரத்தை நாங்கள்அரசாள்வோம்
ஈரேழுபதினாலு லோகமெல்லாம்நாங்கள்
எப்போதும்அரசாள்வோம் இணையொருவரில்லை
தப்பாமலெங்களது சீமைதனிலம்மே
தளராதுஒருநாளும் பஞ்சங்களுமில்லை
அட்சயத்தாலாயிரம்பேர்க் கன்னங்களுமிடுவோம்
ஆதிகயிலாசசிவ சங்கரனுளருளால்
மந்திரத்தினால்மாங்காய் பறிப்போமடிநாங்கள்
மாமுனிவர்தன்னருளால் மாயவனூர்செயலால்
தந்திரத்தினால்தேங்காய் யிற்றுவிழச்செய்வோம்
தணிகைமலைவடிவேலர் தன்னருளாலம்மே
பச்சைமலைவடிவிருந்து பழங்கள்மிகப்பறிப்போம்
பசிகாலமானாலே பட்டணத்தில்திரிவோம்
கொச்சிமலைகுடியிருந்து கோவைப்பழம்பறித்து
குளிர்காலமானாலே குறியுரைக்கவருவோம்
அக்குமணிகொக்குமணி அழகுமணியம்மே

ஆண்மைவரபுருடனுக்கும் மருந்துகொள்ளுவிரோ
பச்சைமணிபாலமணி யிச்சையுண்டோவுயக்கு
படைமுற்றுஞ்சண்டைவெல்ல வசியமுண்டுகொள்வீர்
இந்நாட்டுக்குறத்தியைப்போல் இச்சைசொல்லமாட்டேன்
எந்நாளுமுமையவட்கு கைபார்க்குங்குறத்தி
உண்மையுள்ளகுறியுரைத்து உச்சிதங்கள்பெற்று
உலகமதிற்பரிசுபெற்று மணிபீடத்திற்சேர்வேன்
ஏழிரண்டுநாளாச்சு தென்மதுரைவந்து
இளங்கொடியாளல்லிபற்கு யிசைந்தகுறிசொன்னேன்
ஐந்தொருநாளாச்சுதம்மா துவாரகைக்குவந்து
அலர்மேலுமங்கைபற்கு ஆனகுறிசொன்னேன்
பத்தொருநாளாச்சுதடி அத்திபுரம்வந்து
பாவையரேயுந்தனுக்கு கைபார்ப்பேன்நீவா
தாக்குழந்தைபசியாலே கதறுதடியம்மே
கடுகெனவேமனைபுகுந்து அன்னமதுயிடுவாய்
அரிபிளவும்வெற்றிலையும் அள்ளியிடுவாயே
அதற்கேட்டபிரமனுட புத்திரியுந்தருவாய்

வேறு.

அந்தவுரைகேட்டு அந்தப்பெருந்திருவாள்
தாமக்கருங்குழலாள தாதியைத்தானழைத்தாள்
என்னகுறையென்றுசொல்லி எழுந்துமுன்பாகவந்தாள்
அழைத்தபணிசொல்லுமென அடிபணிந்தாள்தாதியவள்
என்னபணிசொல்லுமென யிளங்கொடிதெண்டனிட்டாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாளதுசொல்வாள்
ஆனகுறத்தியற்கு அன்னம்படையுமென்றாள்
அந்தவுரைகேட்டு அலங்காரக்காரியர்கள்
கைகாலுமசுத்திபண்ணிக் கனிவாயுங்கொப்பளித்து
அக்குமடப்பளியை அலகிட்டுத்தாள்திறந்து
கோட்டைமடப்பளியை குச்சிட்டுத்தாளதிறந்து
முறத்திலிலைபோட்டு முத்துப்போல்சாதமிட்டு
சுற்றிக்கறியைவைத்து புத்துருக்குநெய்வார்த்தாள்
குத்துப்பருப்புமிட்டு கூசாமல்நெய்வார்த்தாள்
கட்டியச்சிமுன்னேவந்து கருங்குழலாளசொல்லுகிறாள்
மலைக்குறத்தியரே மலைக்குறத்திவாருமென்று
கட்டுவச்சிநாயகிக்கு கைக்குச்சலந்தான்கொடுத்து

உன்-பாலகனுக்கன்னம் படையுமென்றுள் தாதியரும்
அப்போதுகட்டுவச்சி ஆணழகிஏதுசெய்தாள்
அன்னமதுவாங்கி ஆரணங்குகட்டுவச்சி
மைந்தனுக்குஅன்னமிட்டு வளநாடிவந்திருக்க
குழந்தைக்குஅன்னமிட்டுக் கொம்பனையுங்கையலம்பி
கூடையொருபக்கம்வைத்து குந்தினுள்பூங்குறத்தி
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாளேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கூறுவாளிராசகன்னி
(நீ) யிருக்கின்றநாடும் எழிலானதேசமும்
மயிலனையேயுன்னுடைய மைந்தர்பெருமைகளும்
மைந்தர்பெருமையும் மற்றப்பேர்சந்தடியும்
ஒன்றுமொளியாமல் உத்தமியேகூறுமென்றுள்
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குஏதுசொல்வாள்

குறம்.

தென்நாடுமலைநாடு யிருக்குமந்தநாடு
தேசமடிகைலைமலை யிருக்குமெங்கள்நாடு
கல்லடைந்தமலைநாடு காடுமந்தநாடு
கைலைமலைநாதரங்கே காட்சிதரும்நாடு
சொல்லரியமலைநாடு சுகம்பெருகும்நாடு
சோணசலயீசருட தேசமடிநாங்கள்
எத்திசையும்புகழ்படைத்து யிருக்குமெந்தநாடு
எழிலானமலைநாட்டில் குறத்திபடிநாங்கள்
குத்திமெத்தக்குனிந்தாடும் குஞ்சரவநாட்டில்
கூசாமல்வாழுமந்த தேசமடிநாங்கள்
வறுத்கமுத்துசெந்நெல்களும் முளைக்குமந்தநாடு
வாழருணகிரிநாடு தேசமடிநாங்கள்
முத்துதலைரத்னமலை எங்களநாடு
மூவர்தமிழ்பாடுமலை எங்களதுநாடு
நீலமலைநிமலமலை எங்களதுநாடு
நிததம்நித்தம்குறம்பாடி திரிவமடிநாங்கள்
பச்சைமலைபவளமலை எங்களுடநாடு
பரமசிவன்காளியுடன் வாதாடும்நாடு
கொச்சிமலைகுடகுமலை எங்களதுநாடு

முருகேசர்வள்ளியரைக் கைபிடித்தநாடு
வெள்ளெருக்கம்பூச்சூடி மிகுந்தஅண்ணாமலையில்
வேணவரம்கொடுப்பதற்கும் குறியுரைக்குங்குறத்தி
உருக்கியபொன்கொடுத்தாலும் ஒன்றுமில்லைஎன்போம்
உண்ணாமலையம்மனுக்கு வுகந்தமுதுபடைப்போம்
வெள்ளிமலைரத்னமலை எங்களதுநாடு
விக்கினற்கும்வேலவற்குப் குறியுரைக்குப்குறத்தி
கண்டத்திலேகறுப்புடைய கயிலையங்கிரிநாதர்
கர்த்தருடதயவாலே குறியுரைக்கவந்தேன்

வேறு.

தேனூர்விலாடமம்மா தினமுஞ்செந்நெல்தான்விளையும்
கல்லின்மேல்நெல்விளையும் கதிர்வாங்குமேலோங்கும்
கட்டுக்கலங்காணும் கதிருழக்குநெற்காணும்
வாழைவடக்கீனு வான்கமுகுதெற்கீனும்
சோலைகிழக்கீனும் துய்யபலாமேற்கீனும்
கோவும்புலியுமொரு குளத்திலேநீர்குடிக்கும்
கீரியும்சர்ப்பமொரு கிண்ணியிலேபால்குடிக்கும்
பூனையுமெலியுமொன்றாய்ப் பொருந்தியேவாழ்ந்திருக்கும்
தங்கமழைசொரிந்து தழைத்திருக்குமெங்கள்நாடு
மாதமும்மாரி மழைகள்பொழிந்துவரும்
திங்கள்மும்மாரிபெய்யும தேசஞ்செழித்திருக்கும்
என்றுமவளுரைத்து யிருந்தாளொருபுறமாய்

பெருந்திருவாள் சொல்லுவது—வேறு.

அப்போதுபெருந்திருவாள் அருங்கிளியாளேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கொம்பனையுங்கூறலுற்றாள்
எந்தனதுசீமையெல்லா முறைத்தாயேகட்டுவச்சி
நீ-எந்தவூர்எந்ததேசம் எனக்கறியக்கூறுமென்றாள்
உந்தனதுநற்குலமும் உன்பேருஞ்சொல்லுமென்றாள்
அப்போமலைக்குறத்தி ஆரணங்குசொல்லலுற்றாள்

குறம்-வேறு.

எங்கள்குலம்ராஜகுலம் குறக்கூட்டமல்ல
எழிலானகுடிசையிலே குடியிருப்போமம்மே
ஐவருக்கும்பெண்டிருப்போம் நாங்களடியம்மே
அபிமானங்குலையாத ஜாதியடிநாங்கள்

பஞ்சவற்குப்பெண்டிருப்போம் நாங்களடியம்மே
பசிதாபங்குலையாத ஜாதியடிநாங்கள்
பெண்டிருந்ததேசமெல்லாம் பின்னையொன்றுமறியோ
பெருநெருப்பைத்தீண்டொணாத ஜாதியடிநாங்கள
மாலையிட்டநாள்முதலாய் மனதரிந்தாரில்லை
மடிநெருப்பைத்தீண்டொணாத ஜாதியடிநாங்கள்
கூரையிட்டநாள்முதலாய்க் குணமறிந்ததில்லை
கொடிநெருப்பைதீண்டொணாத ஜாதியடிநாங்கள்

வே று.

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகியும்
குறத்தியுரைகேட்டுக் கொம்பனையாளேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி வர்ன்னமலைக்கட்டுவச்சி
மாலையிட்டநாள்முதலாய் மனமறிந்ததில்லையென்றாய்
கூரையிட்டநாள்முதலாய்க் குணமறிந்தில்லையென்றாய்
கையில்குழந்தையது வந்தவயணமென்ன
மடியிற்குழந்தைவந்த வாறேதுசொல்லுமென்றாள்
அப்போமலைக்குறத்தி அருங்கிளியாளேதுசொல்வாள்

குறம்.

ஆயன்ரகுராமனெங்கள் அண்ணனடியம்மே
அரிவையந்தசீதைபெரும் நாத்தியடியம்மே
உலகளந்தமாயனெங்கள் அண்ணனடியம்மே
உத்தமியாள்சீதையெங்கள் நாத்தியடியம்மே
உகைளும்ராஜகன்னி எனக்குசக்களத்தி
உகந்துபெற்றசொக்கரெங்கள் தகப்பனடியம்மே
மாயவனேமைந்தன்வரம் வேண்டுமென்றுகேட்டால்
மகிழ்ந்துமெங்கள்ராமரல்லோ மைந்தன்வரந்தருவார்
மாயமரைமனந்தனிலே தினம்நினைப்போம்நாங்கள்
மாயவரேகுழந்தையாக மடிமீதிலிருப்பார்
பிள்ளையில்லாதெங்களுக்கு பிள்ளைவரமதருவார்
பிள்ளைகலிதீர்க்கவந்த பெருமாள்இவர்தாண்டி
மைந்தனில்லாஎங்களுக்கு மைந்தன்வரந்தருவார்
மைந்தன்கலிதீர்க்கவந்த மாயன்இவர்தாண்டி
மந்திரத்தாலேந்துபிள்ளை உண்டோடிஎனக்கு
மகதேவர்தந்தபிள்ளை யீசுரண்டியம்மே

வே று.

குறத்தியுரைகேட்டுக் கொம்பனையாளேதுசொல்வாள்
(இந்த)மாதுஉரைகேட்டு மயிலணையாளேதுசொல்வாள்
மைந்தன்பெரும்வகைகள் மயிலணையேசொல்லிவிட்டாய்
குழந்தைபெரும்வகைகள் கொம்பனையேசொல்லிவிட்டாய்
எந்தெந்தலோகமெல்லாம் கண்டுவந்தாய்கட்டுவச்சி
பார்த்துவந்தலோகம்மெல்லாம் பகரடிபூங்குறத்தி
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
ஆனல்கேள்சொல்லுகிறேன் அன்னமேபெண்மயிலே
பார்த்துவந்தலோகமெல்லாம் பைங்கிளிசொல்கிறேன்கேள்

குறம்

பூலோகம்புவலோகம் பார்த்துவந்தேனம்மே
புதுமையுள்ளசிவலோகம் பார்த்துவந்தேனம்மே
மேலானதெய்வலோகம் பார்த்துவந்தேனம்மே
மேன்மையுள்ளவைகுந்தம் கண்டுவந்தேனம்மே
சீரானசந்த்ரலோகம் பார்த்துவந்தேனம்மே
செகம்புகழுஞ்சூரியலோகம் பார்த்துவந்தேனம்மே
மாலோகம்செனலோகம் பார்த்துவந்தேனம்மே
வரிசையுள்ளபிர்மலோகம் கண்டுவந்தேனம்மே
நேரானதராதலங்கள் பார்த்துவந்தேனம்மே
நிட்சயமாய்குறிசொல்லுல் குறத்தியடிநாங்கள்

வே று.

பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்தான்கேட்டு
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாலேதுசொல்வாள்
பதினாலுலோகமெலாம் பார்த்துவந்தேனென்றுசொன்னாய்
அந்தந்தலோகமெலாம் அறிந்துவந்தேனென்றுசொன்னாய்
கண்டுவந்தலோகத்திலே கனத்தகுறிசொன்னதுவும்
(நீ)சொன்னகுறிக்குமெச்சி உச்சிதங்கள்தந்ததுவும்
வாங்கிவந்தபூஷணங்கள் மயிலணையேசொல்லுமென்ருள்
அப்பேதுகட்டுவச்சி அழகாகஏதுசொல்வாள்
ஆனாற்கேள்பெண்ணரசே அதிசயங்கள்சொல்லுகிறேன்

குறம்.

ஆதிசிவன்பெற்றெடுத்த விக்கின்ராமவற்கு
ஆனைமுகம்பெருவயிறு ஆகுமென்றுசொன்னேன்

இந்திரற்கும்வானவற்கும் மயிலவற்குமல்லோ
இசைவாகநானுரைத்த குறிகள்மெத்தவுண்டு
ஈசுரற்கும்பிரமகத்தி யிருக்குதென்றுசொன்னேன்
இன்னமொருபெண்டுனக்கு வருவாளென்றுசொன்னேன்
என்குறிக்குயீசுரனுர் மெச்சியல்லோஅம்மே
இபலானமுத்துமாலை யீய்ந்தாரடியம்மே
கரியவரும்வானரும் மெச்சியல்லோஅம்மே
கல்லிழைத்தகணையாழி தந்தாரடியம்மே
விஷ்ணுவுக்குமலட்சுமிக்கும் வேணகுறிசொன்னேன்
விதமாகஎன்னையவர் மெச்சிக்கொண்டுஅழைத்து
பட்சமுடன்எந்தனுக்கு லட்சுமியாள்தானும்
பாங்கானமார்பதக்கம் தந்தாரடியம்மே

வேறு.

அந்தவுரைகேட்டு அழகுபொருந்திருவாள்
குறத்தியுரைகேட்டு கொமபனையாளேதுசெல்வாள்
குறம்பாடிபெற்றுவந்தாய் கோடானரத்தினங்கள்
உள்ளகுறியுரைத்து உச்சிதங்கள்பெற்றுவந்தாய்
பூங்குறத்தியெந்தனுக்கு புகழ்ந்துகுறிசொன்னையானல்
மனதின்குறைகளெல்லாம் வகையாகச்சொன்னையானல்
உள்ளகுறியுரைத்தால் உச்சிதங்கள்தாரனடி
நல்லகுறியுரைத்தால் ரத்தினங்கள்தாரனடி
கொம்பனையேயெந்தனுக்கு குறியுரைத்தபிற்பாடு
குறக்கூடைதானிறைபக் கொட்டுகிறேன்ரத்தினங்கள்
ஒன்பதுரத்தினங்கள் உத்தமியேதந்திடுவேன்
வச்சிரவைடூரியம் மாணிக்கம்தந்திடுவேன்
நீலபதக்கங்களும் நிறைந்தமுத்துதாவடமும்
பச்சைபதக்கங்களும் பருத்தமுத்துதாவடமும்
தாளிபதக்கங்களும் சன்னல்பின்னல்தாவடமும்
அத்தனையும்நான்தருவேன் ஆனகுறிசொல்லுமென்ருள்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
மாதுமுகம்நோக்கி மலைக்குறத்தியேதுசொல்வாள்
தாளிபதக்கம்வேண்டேன் சன்னல்பின்னல்தான்வேண்டேன்

பச்சைபதக்கம்வேண்டேன் பருத்தமுத்துநான்வேண்டேன்
மாணிக்கம்வேண்டேன் மகரகண்டி நான்வேண்டேன்
உத்தமியேஉன்தயவால் மெத்தவுண்டுஎங்களுக்கு
பாரளந்தநாதர் பச்சைமால்தன்தயவால்
வெள்ளிமலைமேலே வேணதுண்டுஎங்களுக்கு
உன்கையிலேதானிருக்கும் கற்பூரசம்பாவும்
செந்நெல்கொடுத்தையானால் சீராகஎந்தனுக்கு
அள்ளிக்கொடுத்தையானால் ஆனந்தவாழ்மார்பி
வறுத்துகொறித்திடுவேன் வையகத்தில்வாழ்ந்திடுவேன்
செந்நெலதுகொடுத்தால் நல்லகுறியுரைப்பேன
குறச்கூடைநெல்கொடுத்தால் குறியுரைப்பேனுந்தனுக்கு
அந்தவரைகேட்டு அழகுபொருந்திருவாள்
மெல்லியாள்சொல்கேட்டு நல்லதென்றுசம்மதித்தாள்
அழகுசம்பாநான்தருவேன் ஆனகுறிசொல்லுமென்றாள்.
நெல்லளந்துநான்றருவேன் நல்லகுறிசொல்லுமென்றாள்
அப்போதுகட்டுவச்சி அதற்குமேசம்மதித்து
கொம்பனையாள்மாதருக்கு குறிசொல்லப்போனார்காண்

குறம்.

சாணியதுதானெடுத்து சதிருடனேமெழுகி
சட்டமுடன்பிள்ளையாரைப் பிடித்துமங்கேவைத்தாள்
அருகுதும்பைகொன்றையது அவர்சிரசில்சாத்தி
அழகானகனிவகைகள் கொண்டுமங்கேயழைத்து
கிழங்குடனேவாழைப்பழம் தேங்காயுமுடைத்து
கிண்ணியிலேபாலமூர்தம் கொண்டுவந்துபடைத்தாள்
பச்சரிசிதேங்காயும் பயிறுடனேபாலும்
பாங்காகத்தான்படைத்து தீபதூபங்கொடுத்தாள்
தும்பைமலரறுகெடுத்து அவர்சிரசில்சாத்தி
சுத்திவந்துகைதொழுது தெண்டனிடுமென்றாள்
சிந்தையிலேஉன்குறைகள் நீங்கிடுந்துஅம்மே
சிவன்மகனார்கணபதியை வந்துபணியென்றாள்
உங்கள்குலதெய்வங்களை யுகந்துநன்றாய்ப்போற்றி
உன்வீட்டுப்பூவாடைக் காரிகளைநினைத்து
சிந்தயிலேதியானம்பண்ணி வந்தமரும்அம்மே
திரமாகவுந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ

எந்தன்குலதெய்வங்களை நானினைந்துஅம்மே
இகழாமல்உந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ
கங்காபவானியம்மாள காளிமகாதேவி
கண்மூன்றுடையசத்தி அனைவோரும்வாங்கள்
ஆகாசவாணிதுர்க்கை ஐயனார்பிடாரி
அலைகடலில்வாழுகின்ற கன்னிகளும்வாங்கள்
கைலாசவாசருமே கச்சாலைநாதா
காஞ்சியில்வாழ்வகாம்பர காமாட்சிவாங்கள்
அண்ணாமலைநாதருமே வுண்ணாமுலைத்தாயும்
அங்காளம்மைவந்து குறக்கூடையமரும்
ஏழுக்கன்னிகளும் எல்லைப்பிடாரிகளும்
எல்லவரும்வந்துயிந்தக் கூடைதனிலமரும்
ஈசுரரும்பார்வதியும் இருவருமாய்நீங்கள்
இன்பமுள்ளக்குறக்கூடை வந்தமரவேணும்
அச்சுதரும்லட்சுமியும் ஆனந்தமாக
அன்புடனேகுறக்கூடை தன்னில்வந்துஅமரும்
பிர்மாவும்சரஸ்வதியும் புகழாகநீங்கள்
பெருமையுடன்குறக்கூடை வந்தமரவேணும்
தேவேந்திரரிந்த்ராணி சித்தர்கின்னராளும்
தெளிவானகுறக்கூடை தன்னில்வந்துஅமரும்
வள்ளிதெய்வானையம்மை யிருவருங்கூடி
வடிவேலர்வந்துகுறக் கூடைதனிலமரும்
ஏழுமுனியிளையமுனி மன்னருசாமி
இவர்களெல்லாமொன்றாக குறக்கூடையமரும்
பச்சைமலைத்தாயாரும் பெரியபாளையத்தாளும்
பாவாடைராயனுமே வந்துமிகவமரும்
முப்பத்துமுக்கோடி தேவர்களுங்கூட
நாற்பத்தெண்ணாயிரமாம ரிஷிகளுமேஒன்றாய்
அஷ்டதிக்குபாலகரும் நவக்கிரகங்கள்கூட
அனைவோரும்வந்துமிந்தக் கூடைதனிலமரும்
அண்ணரண்டதெய்வங்களை நினைத்துமந்தக்குறத்தி
அழகுபெருந்திருவாட்கு யேதுகுறிசொல்வாள்
முந்திமுந்திவிநாயகனை தொழுவோமடிநாங்கள்
முருகருடபாதமலர் என்னாளுமறவோம்
சத்திவிநாயகனை தொழுவோமடிநாங்கள்

சரஸ்வதியை அனுதினமும் சிந்தையினில்மறவோம்
ஆதிசிவன்மாயவரைப் பிர்மாவைத்தொழுவோம்
ஆகாயதேவருடன் இந்திரரைமறவோம்

வேறு.

அப்போமலைக்குறத்தி ஆரணங்குஏதுசொல்வாள்
தேவாதிதேவர்களை நினைந்துமேஅப்பொழுது
கொல்லபுரத்தாளை நினைந்துகுறிசொல்லுகிறேன்
குறிசொல்வேன்வாடியம்மா யென்றாளேபூங்குறத்தி
அப்போபெருந்திருவாள் ஆரணங்குயேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாளேதுசொல்வாள்
அப்படிக்கேசொல்லதென்று ஆரணங்குவந்தமர்ந்தாள்
குறக்கூடைமுன்பாகக் குந்தினாள்நாயகமும்
மலைக்குறத்திகட்டுவச்சி வகையாகயேதுசொல்வாள்

குறம்.

முறம்நிறம்பச்செந்நெல்கொண்டு மூன்றாகப்பகுந்து
முன்பாகமனதிலெண்ணிக் கேட்டதெல்லாம்சொல்வே
உன்பேருபெருந்திருவாள் உடன்பிறந்தாலுண்டு
உன்கணவன் துரியோதனன் உள்ளபடிதாண்டி
இலக்குணற்குப்பூநூல்கலியாணமென்றுசொல்லி
இசைந்தைவரையும்அழைத்து வந்ததுண்டோநீங்கள்
அவர்கள்வரும்வழிதனிலே வசிகளையும்நாட்டி
ஐவரையுங்கொல்லவென்று எண்ணியிருந்தீர்கள்
ஆதியென்றகோபால கிருஷ்ணனுடதயவால்
அதுக்கும்தம்பிழைத்தார்களைவர்களுமம்மே
மல்லர்களைவிட்டுமல்லோ எண்ணெய்க்ளத்தேய்த்து
மாளாதபஞ்சவரைக் கொல்லவென்றநினைத்தீர்
எம்பெருமாளருளாலே ஐவர்களும்பிழைத்தார்
குளிக்குமந்தக்குளந்தனிலே சூர்வசியைநாட்டி
கூசாமல்பாண்டவரைக் கொல்லத்துணிந்தீர்கள்
உகந்தளிக்குஞ்சோறுதனில் நெஞ்சதனைக்கலந்து
உயிருள்ளபாண்டவவரைக் கொல்லத்துணிந்தீர்கள்
அப்போதுவீமராஜன் அவர்களுண்ணுஞ்சோற்றை
அனைவருக்கும்ஆகாதென்று தான்வாரிப்பொசித்தார்

வாரியுண்டசோற்றுலே மதிம்பக்கமாகி
மன்னவர்மெய்மறந்து வைகுந்தம்சேர்ந்தார்
அப்போதுநால்வருமே அலண்டுபிரண்டழுது
ஆனந்தமாயவரை மிகநோக்கித்தொழுதார்
அப்பொழுதுமாயனும் ஐவர்களைககார்க்க
அத்திபுரபவந்தாரோடி ஜோகிவடிவாக
விஷகடிபாமபுகடி தீருதற்குகருந்து
வேணவிதமருந்தெடுத்து கூறிவந்தார்தெருவில்
கூறிவந்தசத்தமதை தருமராவறிந்து
கொப்பனவேதம்பிதன்னை அழையுமென்றுசொன்னார்
அப்போதுதம்பியவன் தானழைத்துவந்தான்
அழைத்தவனைசொல்லுமென்று ஜோகியவன்கேட்க
தலைவிதிபோயார்சதியோ தானறியேனையா
தம்பிதன்னைஎழுப்புமென்று தர்மர்சொன்னாரப்போ
எழுப்பிவிட்டாலுந்தனுக்கு கொடுப்பதென்னவென்றார்
எந்தனதுஆஸ்திகளை உந்தனுக்குத்தருவேன்
அப்போதுஜோகியவன் மருந்தெடுத்துவுரைத்து
ஆயருடஅருளாலே பிழக்கவென்றுகொடுத்தேன்
வைகுந்தப்போனவுயிர் வந்துவீமாபிலெழுக்க
மந்திரங்கள்தந்திரங்கள் செய்தானடியம்மே
அவன்செய்தமந்திரத்தால் பிழைத்தானடிவீமன்
அலண்டுநித்திரைபோனவன்போல் பிரண்டெழுந்தான்வீமன்
செக்கிருந்தவீமனமே பிழைத்தெழுந்தானென்று
திக்கெடுத்துமனங்கலங்கி திரியோதிரனழுதான்
மற்றுமொருவிதத்தாலே பஞ்சவரைக்கொல்ல
மனமகிழ்ந்துசகுனியுடன் ஆலோசனைசெய்து
படுக்கின்றபாய்தனிலே பாம்புகளைவிட்டு
பண்டபனதக்கபாண்டவரைக் கொல்லத்துணிந்தீர்கள்
அதற்குந்தப்பிபிழைத்தார்கள் பாண்டவர்களம்மே
ஆயனார்பயனுட உபாயமடியம்மே
வஞ்சனையால்சூதாடி பாண்டவரையப்போ
மாளாதவிலங்குகளை மாட்டிவைத்தாரம்மே
பஞ்சவரைவஞ்சனைகள் செய்ததுபோதாமல்
பாஞ்சாலிதுரோபதையைப் பற்றிபிழுத்தார்கள்
ஐவருக்குமஉகந்ததொரு அபிஷேகத்திலையாம்
ஆரணங்குதுரோபதையை சபைதனிலேயிழுத்தார்
பற்றியிவர்தானிழுத்து பரவைதுகிலுரிந்து
பன்னகையங்கமெல்லாம் பண்ணிவைத்தார்சபையில்
கட்டழகிதுரோபதைதான் மனங்கலங்கியப்போ
கர்த்தாவர்மாயவரைக் கைதொழுதுநின்றாள்

ஆபரவர்மாயவனர் அறிந்தாரிவள்துயரம்
அட்சய்மாய்துகில்வர ஆயர்வரமளித்தார்
மங்கையந்தத்துரோபதைக்கு மாளாத்துகில்கொடுத்தார்
வளருதென்றுசபைதனிலே மெச்சிநின்றார்பெரியோர்
இப்படியாய்வஞ்சனைகள் செய்ததுண்டோஅம்மே
இன்னங்கொஞ்சமுண்டடிதான் சொல்லுகிறேன்கேளு
அவருடையபங்குகளை அடங்கலுமேபரித்து
அரண்மனையுமண்டபமும் இடிக்கலாயமுண்டோ
அவருடையதேவிகளை அம்பலத்தில்நிறுத்தி
அவளைமிகவாய்பழுது சொன்னாரடியம்மே
உத்தமியைக்கொண்டுவந்து உங்கள்சபைநிறுத்தி
உரியாததுகிலுரிந்த துண்டோடிநீங்கள்
பத்தினியைக்கொண்டுவந்து பார்சபையில்நிறுத்தி
பாங்கழியப்பேசினது உன்புருஷனல்லோ
மாதுதனைக்கொண்டுவந்து மகாசபையில்நிறுத்தி
மனமழியப்பேசினது முண்டோடிநீங்கள்
அப்பொழுதுதுரோபதையாள் தன்மனதிலெண்ணி
அண்டாதசண்டாள ரென்றுமிகநொந்து
திரியோதிரன்முகம்பார்த்து தேவியவள்சொல்வாள்
தீராதபெருஞ்சபதம் இட்டாளந்தச்சபையில்
மொய்குழலாள்துரோபதையும் மூன்றிரண்டுபேரும்
முடிமன்னர்சபைதனிலே இட்டார்பெருஞ்சபதம்
இட்டபெருஞ்சபதத்தினால் துரியோதனன்நொந்து
இதயமதுதானடுங்கி தகமையெடுத்துரைப்பான்
பனிரண்டுவருஷமட்டும் வனவாசம்திரிந்து
பதின்மூன்றாம்வருஷமதில் மறைவாகயிருந்து
பதின்மூன்றுஞ்சென்றவுடன் பதினாலில்வந்து
பாரதத்தைதான்முடித்து பட்டமாளுமென்றான்
அவர்களுக்குவஞ்சனைகள் செய்துண்டோநீங்கள்
அத்தனையும்பொருத்துஐவர் போனார்வனவாசம்

வேறு.

நீங்களிந்தஞாயமெல்லாம் நிச்சயமாய்ச்செய்ததுண்டோ
அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்திவுரைகேட்டு கொம்பனையாளேசொல்வாள்
வஞ்சனைகள்செய்ததுண்டு மாயங்கள்மெத்தவுண்டு
பண்ணாதகோலமெல்லாம் பண்ணிவைத்தோமைவரையும்
வஞ்சனைகள்சூதுகொலை வனவாசம்போனதுண்டு
பதின்மூன்றுஞ்சென்றபின்பு பதினாலில்பஞ்சவர்கள்
பாரதம்வென்றுமவர் படையெடுக்கவருவாரோ
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவருவாரோ

வருவாரோவாராரோ மற்றொன்றுசொல்லடிநீ
என்புருஷன் தானே இவர்நாட்டையாளுவாரோ
பாரதம்வென்று படைபொருதும்வேளையிலே
நாங்கள்செலிப்பதுவும் நாடுநகராளுவதும்
அவர்கள்செலிப்பதுவும் ஆராய்ந்துசொல்லுமென்றாள்
அப்போமலைக்குறத்தி அரிவையருமேதுசொல்வாள்
பற்றிவந்ததெய்வமோ தான்உற்றகுறியுரைக்க
பஞ்சவர்கள்தன்மனதை பார்த்துமிருந்தேனே
கட்டழகர்தன்பனதை கண்டுமிருந்தேனே
சாதகமும்பொய்யாது தலைவிதியுந்தப்பாது
பிரமனெழுத்திதுதான் பிரளாதொருநாளும
கர்த்தருடகட்டளைகள் கடவாதொருநாளும்
சூர்ப்பகைவன்றன்னருளா லெண்ணியேஇப்பொழுது
சூதன்நடத்தையெல்லாம் சொல்லுகிறேன்கேளடிநீ

குறம்.

கூடைதனிலமர்ந்திருக்கும் கொல்லபுரத்தாளே
கொம்பனையாள்கேட்குங்குறி சொல்லவரமருளும்
இன்னமிவள்கேட்குங்குறி எல்லாம்நான்சொல்ல
எந்தனுக்குவாக்கருளும் என்றுமிகத்தொழுது
பெருந்திருவாள்முகம்நோக்கி பின்னுமந்தக்குறத்தி
பெருமையுள்ளஐவரது சேதிகளைசொல்வாள்
தர்மமேஜெயமென்று போனார்வனவாசம்
தர்மங்களைநினைப்பவர்க்கு தாழ்ச்சியுண்டோசொல்லும்
ஐவர்களும்ஐந்துவுரு கொண்டுமல்லோவம்மே
அன்பானவிராடபுரம் சேர்ந்தாரோடியம்மே
இன்னமுந்தன்கணவன்படை சேனைகளைக்கூட்டி
இயலானஉயுத்தியங்கள் நடக்குதடியம்மே
உயுத்தியங்கள்நடக்கையிலே ரத்தக்கடலோடும்
மெத்தனவேநானுரைத்தேன் சற்றேநின்றுபாரும்

வேறு.

அப்போபொருந்திருவாள் அரிவையருமேதுசொல்வாள்
ஆனமலைக்குறத்தி அழகானகட்டுவச்சி
வர்ன்னமலைக்கட்டுவச்சி வாக்குரைப்பாளெந்தனுக்கு
என்கணவன்ராச்சியத்தை யாண்டுமிருப்பானோ
அத்திபுரபட்டனத்தை யாள்வாரோஎன்புருஷன்
ஒருத்தராயாள்வாரோ வுத்தமியேயென்புருஷன்
பங்காளிபஞ்சவர்கள் பாதினுடான்வாரோ
இன்னம்வருவாரோ எங்கள்தாயாதிசனும்
சாகாமலேபிழைத்துத் தாணிபதியாள்வாரோ

செத்தொழியாமல் செகதலத்தையாள்வாரோ
சண்டையிலண்ணிநாடுநகர் தாமேபெறுகெலிப்பாரோ
மறுபடியும்வருவாரோ மன்னரந்தப்பஞ்சவர்கள்
எனக்குத்தெரியச்சொல்லு மேந்திழைகட்டுவெச்சி
அப்போதுமலைக்குறத்தி அழகாகவதுசொல்வாள்

குறம்

பாவைசபைதனில்விரித்த கூந்தலடியம்மே
படுகளத்திற்முடிப்பேனென்று போனாள்வனவாசம்
உங்கள்சபைதனில்விரித்த கூந்தலடியம்மே
உதிரத்திலேமுடிப்பேனென்றுபோனாள்வனவாசம்
நானொருத்தியல்லவோடி தலைவிரித்துநின்றேன்
இந்நாடல்லாந்தலைவிரிக்க லாச்சுமென்றுபோனாள்
வஞ்சனைகள்செய்ததொரு மன்னவரையெல்லாம
மாண்டபின்னர்முடிப்பேனென்று போனாள்வனவாசம்
பத்தினியாள்விரித்ததொரு கூந்தலதுஅம்மே
பாருலகம்விரிக்குமென்று போனாள்வனவாசம்
அருந்ததியாள்விரித்ததொரு கூந்தலல்லோவம்மே
(நாளை அனைவோரும்விரிப்பாரென்று போனாள்வனவாசம்.
பதினெட்டாம்நாளையிலே படைபொருதும்சண்டை
பார்வன்னர்மார்பிலேறி முடிப்பாள்தலைகூந்தல்
நாகக்கொடிகைபிடித்த நாடாளுமன்னன்
(உன்) நாயகன்றன்மார்பிலேறி முடிப்பாள்தலைகூந்தல்
அவனுடைவுதிரத்திலே அள்ளித்தலைசீவி
அரசனுடமார்பெலும்பைச் சீப்பாகவகுத்து
பக்கக்குடல்பதினையும் பத்தினியாளெடுத்து
(நாளை) படுகளத்தில்வாரிதலை முடிப்பாளடிகூந்தல்
நூற்றொருவர்பூமுடியை நொறுங்கடித்தபின்பு
வேற்றுமைகள்தெளிந்தென்று வருவாளேபாஞ்சாலி
பகைகாளிதலைகளெல்லாம் பற்றறுத்தபின்பு
பத்தினியாள்தலைமுடித்துப் பாராளவருவாள்
அன்றோடேமுடிப்பாடி ஐவருட்சபதம்
அரசாளவந்திடும் நாரணைக்கேசேரும்
இக்கட்டுசொன்னகுறி யினிபிசகாதம்மே
கலப்பநளார்ஆணையிது இருந்தாள் அந்தக்குறத்தி
கூடைதனில்செந்நெல்லது கொட்டலியோ அம்மே
கொம்பனையேயுன்பணைக்குக் கொண்டுநான்நடப்பேன்
எப்பொருநாளாச்சுதடி யித்தெருவேவந்து
என்கணவன்இரைதேடி யிங்கேவருவானடி
பகலொருநாளாச்சுதடி வீட்டைவிட்டுவந்து
பக்கலெப்பாவனைத்தேடி வருவானடிபெண்ணே

வேறு.

என்றுமவளுரைக்க எதுசொல்வாள்பெருந்திருவாள்
குறத்திநீதிசொன்னதெல்லாம் கொற்றவர்க்கேதற்காலம்
மாதேநீசொன்னதெல்லாம் மயிலணைக்கேநற்காலம்
எங்களுக்குற்றக்குறி ஏதொன்றுஞ்சொல்லலியே
மன்னவருக்குற்றக்குறி மயிலணையேசொல்லலியே
பஞ்சவருக்காக வுரைத்தீரோபத்தினியே
காடாண்டபஞ்சவர்கள் நாடாண்டுவருவாரோ
ஐவரும்வந்துமல்லோ அரசாண்டிருப்பாரோ
நாலாவகடுந்திரளார் நூற்றொருவரானவரும்
இருந்தரசையாளுவாரோ எனக்குரையுங்கட்டுவச்சி
நிட்சயமானகுறி நீயுரைங்கட்டுவச்சி
அந்தவுரைகேட்டு அருங்கிளியாளேதுசொல்வாள்
(நான்) செப்புங்குறிகளெல்லாம் செவிதனக்கேயரளியோ
பார்வதிக்குமீஸ்வரற்கும் பகுந்துகுறியுரைத்தேன்
வேலவர்க்கும்வள்ளியர்க்கும் வேணகுறியுரைத்தேன்
இந்திரற்கும்தேவியற்கும் இசைந்தகுறியுரைத்தேன்
ராமருக்கும்சீதையற்கும் நல்லகுறியுரைத்தேன்
வேதனுக்குச்சரஸ்வதிக்கும் வேண்டுங்குறியுரைத்தேன்
அந்தந்ததேவரெல்லாம் அடுத்துமனைக்கேட்டதில்லை
இன்னமின்னம்சொல்லுமென்று ஏந்திழையேகேட்கிறாய்நீ

குறம்.

நாகக்கொடிகனைபடைத்த நறுநுதலாய்கேளாய்
(உன்) நாயகனாராளுவகைச் சொல்கிறேன்கேளம்மே
நூலால்கடுந்திரளார் நூற்றொருவரம்மே
துட்பமுடன்அரசாண்டு அற்பமதில்வாழ்வர்
பத்துதிங்கள்உண்டடியே பாராளமன்னர்
பதினோராந்திங்களிலே படைமுகத்துமாள்வார்
எட்டிரண்டுதிங்களமட்டும் யிருந்தரசையாள்வார்
இனியதொருதிங்களிலே யிறந்திடுவார்முடிகள்
பத்தினியார்சாபத்திலே பாரதப்போர்சுன்னில்
பஞ்சவர்கள்கையாலே மாண்டிடுவார்அம்மே
அருங்கிளிசாபத்தினால் அரசர்களும்அம்மே
ஐவருடகையாலேமாண்டிடுவார்சொன்னேன்
படுகளத்தில்மாண்டபின்பு கேளடிநீபெண்ணே
பஞ்சவர்கள்அரசாள்வார் பார்முழுதுமல்லோ
அருங்கிளியாள்கூந்தல்தனை அங்கனமேமுடித்து
ஐவருடன்வாழ்ந்திருப்பார் ஆரணங்கேகேளும
என்றுமிந்தகுறத்திசொல்ல இளங்கொடியாள்கேட்டு
இடிவிழுந்தாற்போல்முழுதும் ஏங்கியழுதாளே

வேறு.

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகமும்
மார்பிலலைந்துகொண்டு மண்மேற்பிரண்டழுதாள்
ஆகடகக்கையாலே அறைந்துகொண்டுதானழுதாள்
மோதிரக்கையை முகத்திலறைந்துகொண்டாள்
பேடைமயிர்கன்னாள் பெருந்திருவாள்தானழுக
அங்குமொருநாதி அறியுடையாவோடிவந்து
கொப்புதிருத்தியல்லோ கோர்வைமிகத்திருத்தி
வளையலதுதிருத்தி வாளிமிகதிருத்தி
பூணாரேசகத்தை புழுதிமிகத்திருத்தி
ஆறவிடுமென்றுசொலலி அவளெழுந்துபோய்நடந்தாள்
கட்டார்கருங்குழலாள் காந்தாரிமுன்னேவந்து
செம்பொன்திரைநீக்கிச் சிக்கெனவேதெண்டனிட்டு
அம்பொன்திரைநீக்கி அழகாகதெண்டனிட்டு
தெண்டனிட்டதாதி திருப்பமெடுத்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
காந்தாரிநாயகருக்கு கன்னியருமேதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகையில்
குறத்தியங்கேவந்ததுவும் குறிகளுரைத்ததுவும்
கானக்குறத்தியங்கே கைபார்த்துச்சொன்னதவும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளப்போகிறதும்
மன்னர்பஞ்சபாண்டவரும் வையகத்தையாளுவதும்
ஐவரந்தபஞ்சவர்கள் அரசாட்சியாளுவதும்
காஞ்சிநாடாளும் கருணரிங்கேமாளுவதும்
நாலால்கடுந்திரளார் நாற்றுருவர்மாளுவதும்
பாஞ்சாலன்பெற்றகன்னி பத்தினியாள்துரோபதையாள்
கொற்றூர்குழலியவள் கூந்தல்முடிப்பதுவும்
அத்தனையுஞ்சொல்லி வுரைத்தாளந்தகட்டுவச்சி
பேடைமயிர்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
ஆனந்தமாரி அழுதுபடுத்தாள்காண்
அந்தவிசேஷம் அறிக்கையிடவந்தேனென்றாள்
கட்டார்கருங்குழலி காந்தாரிதான்கேட்டு
குறிவுரைக்கவந்தெதாரு கொம்பனையாள்கட்டுவச்சி
குறிசொல்லிபோனளோ கொம்பனையேசொல்லுமென்றாள்
அங்கேயிருக்காளோ ஆரணங்கேசொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகானதாதியர்கள்
பேடைமயிர்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகையில்
குறிகளுரைத்து யிருக்கின்றாள்பைங்கொடியும்
அந்தவிசேஷம அறிக்கையிடவந்தேனென்றாள்
குருடனுடதேவி கொம்பனையுந்தான்கேட்டு
அவள்-ஆங்காரக்கோபமுடன் அங்கேயெழுந்திருந்து

தாதிமுகம்நோக்கித் தையலுமேதுசொல்வாள்
தேசத்தையாளும் திரியோதிரனுக்கு
சொல்லிநீவாடியென்று மெல்லிநடக்கலுற்றாள்
அறிக்கையிட்டுவாறுமென்று ஆணரங்குவாராளே
அரண்மனையேழுகட்டும் அரதப்புரம்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்மாளிசென்று
மருமகளைத்தான்பார்த்து மகராசியேதுசொல்வாள்
ஏன்காண்மருமகளே யிந்தவிதியுந்தனுக்கு
ஆர்காணும்கட்டுவச்சி அடவாயுரைத்தவள்காண்
எங்கிருந்துஎங்கேவந்தாய் இந்தக்குறியுரைக்க
என்றுமவளுரைக்க ஏதுசொல்வாள்கட்டுவச்சி

குறம்

ஆதிசிவன்நாடிருந்து வந்தேனடியம்மே
அத்திபுரம்குறியுரைக்க அழகாகவந்தேன்
கொச்சிமலைகுடியிருக்கும் குறத்தியடிநாங்கள்
குமரேசர்வள்ளியற்கும குறியுரைப்போம்நாங்கள்
பச்சைமலைகுடியிருக்கும் குறத்தியடிநாங்கள்
பரமசிவனுமையவட்கு கைபார்க்குங்குறத்தி
மலையாளதேசம்தேடி மகிழ்ந்துகுறிசொன்னேன்
வளமானசெந்நெலெல்லாம் வாங்கிவந்தேனம்மே
அல்லியுடசீமையிலே ஆனகுறம்சொன்னேன்
அல்லியவள்மனமகிழ்ந்து நெல்லுமள்ளியிட்டாள்
வம்பருக்கும தும்பருக்கும் வாய்த்தகுறிசொன்னேன்
கம்பனைக்குஅள்ளியிட்டார் கட்டபூகியம்மே
ஆரியபாண்டியற்கு அழகுகுறிசொன்னேன்
சீரானகேழ்வரகைத் திடமுடனேயளித்தார்
இந்தநடடிக்குறியுரைக்க யிங்கேவந்தயிடத்தில்
எந்தனுக்குப்பெருந்திருவாள் என்னகொடுப்பாளோ

வேறு

இப்படியாய்ச்சொல்லி யிருக்கின்றாள்கட்டிவச்சி
கட்டார்குழலியரும் காந்தாரிதான்கேட்டு
குறத்திமுகம்நோக்கித் கொம்பனையுந்தான்கேட்டு
முன்னேஉரைத்தகுறி சொல்லுங்காண்மொய்குழலே
என்மருமகட்குமசொன்னகுறி எந்தனுக்குச்சொல்லுமென்றாள்
அப்போமலைக்குறத்தி யாரணங்குனதுசொல்வாள்
முறத்திலேசெந்நெல்கொண்டு வாருங்காண்மொய்குழலே
செந்நெலதுபரப்பி செப்புவேன்குறியுனக்கு
அப்போதுகாந்தாரி ஆரணங்குமேதுசெல்வாள்

கொத்துசம்பாமுக்குசம்பா குடமல்லிச்சம்பாவும்
கொண்டுவந்தேமுறத்தில் கொட்டினால்குறத்திமுன்னே
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குதான்பார்த்து

குறம்.

நெல்லைபவள்ளைகபிடித்து நேர்ந்தகுறியென்பாள்
நிமலியிந்தஅரசிபற்கு நினைத்தகுறிசொல்வாள்
பொன்முறத்தைகைபிடித்துப் புதுமையிதுயென்பாள்
பொற்புடையபாஞ்சாலி வதுமைகுறிசொல்வாள்
முக்கண்ணனார்தன்மகனே முன்னடத்தவேண்டும்
மூஷிகவாகனரேவந்து குறியுரையுமையா
விகடசக்ரகணபதியே வாக்கருளவேண்டும்
வேலவரேவள்ளிபரே வாக்கருளவேண்டும்
பச்சைமலைத்தாயாரே பாவைகுறியுரையும்
பரமசிவன்பார்வதியே பகர்ந்துகுறிசொல்லும்
நாகமலைகொச்சிமலை நடந்தகுறிசொல்லும்
நாராயணலட்சுமியே நாவில்வந்துவுரையும்
தெய்வங்களைநினைத்தாலே சிலுர்த்துக்கொள்ளுதுடம்பை
தேகமெல்லாம்நடுக்குதடி தேன்மொழியேகேளும
குறக்கூண்டைகுலுங்குதடி கொம்பனையே அம்மே
கோலவிழிதுடிக்குதடி குறிகள்சொல்வேன்கேளும்
முன்னடந்தகாரியங்க ளொன்றுரைப்பேன் அம்மே
முத்துமுடிபாண்டியர்கள் அரசாளும்நாளில்
பத்தாண்டுசென்றபின்பு பாவையரேநீயும்
பார்மீதிலேவளர்ந்து சமைந்தாயடிபெண்ணே
உன்தனக்குகைபார்த்த சாஸ்திரிமார்அம்மே
உனக்குள்ளலட்சணங்க ளுண்மையென்னசொல்வேன்
மண்டலத்தையாளுகின்ற மன்னர்களானாலும்
மகதேவர்முதலான தேவர்களானாலும்
தெய்வபதியாளுகின்ற தேவரானாலும்
தென்னிலங்கையாளுகின்ற ராட்சதரானாலும
உன்னைத்தொட்டுமணம்புணர்ந்தா ருடனேயவர்மாள்வார்
உறுதியிதுநிச்சயங்கா ணென்றுகணிதத்தில்
என்றுரைத்தார்வேதியர் இச்சபையிலம்மே
என்குறிகள்பொய்யோடி இன்னமுண்டுசொல்வேன்
அதுவுமிந்துவுன்றகப்பன் ஆயாசப்பட்டு
அரசாண்டுயிருக்கையிலே அங்கேயொருநாளில்
அருகிருந்தமந்திரிகள் ஆலோசனைசெய்து
அரசனுடமுகம்நோக்கி அவர்களெடுத்துரைப்பார்
மன்னவனேநீர்கேளும் ஆலோசனையொன்று
பகுமாரமைமாலையிட மர்மம்சொல்லுகின்றேன்

மணமாலைபந்தலிட்டு மங்கையரைவைத்து
மன்னவரேயாட்டுகிடா கொண்டுவந்துமல்லோ
ஆட்டுகிடாகைதனிலே மங்கிலியந்தந்து
ஆரணங்குகழுத்துதனில் தரியுமென்றார்அப்போ
மங்கிலியந்தரித்ததொரு ஆட்டுக்கிடாமாண்டால்
மன்னர்வந்துமங்கையரை மாலையிடுவார்கள்
அந்தவுரைதான்கேட்டுவுன்தகப்பனம்மே
அப்படியேநல்லதென்று அவனும்சம்மதித்தான்
பதிங்காதம்பந்தலிட்டு பாவையரேவுனக்கு
பாங்கானகிடாக்கையில் தாலியதுதந்தார்
ஆட்டுக்கிடாவுன்கழுத்தில் தாலிகட்டியம்மே
ஆறுசுக்கலாய்வெடித்து அந்தக்கிடாமாள
அதுசமையந்தானறிந்து அந்தகனும்அம்மே
ஆரணங்கைஎந்தனுக்கு அருளுமென்றுகேட்டான்
தானதுகேட்டுன்தகப்பன் நல்லதென்றுசொல்லி
சதுரானகலியாணம் தானுமங்கேமுடித்தான்
மண்டலத்தையவருமல்லோ யாண்டிக்கும்நாளில்
மங்கையரேவுந்தனுக்கு மைந்தனில்லையென்று
நன்மையுண்டுசெல்வமுண்டு ராச்சியங்களுண்டு
நாடாளமைந்தரில்லை என்றிருந்தாயோடி
உன்புருஷனுடன்பிறந்த பாண்டுமகராஜன்
உண்மையுடனவர்மணந்த பத்தினியாள்குந்தி
குந்தியம்மாள்கர்ப்பவதி யானாளென்றுநீயும்
கொள்ளாதவருத்தமுற்றாய் குமரியல்லவம்மே
அடங்காதகோபமுடன் அங்கொருநாளம்மே
ஆற்றங்கரைஸ்நானம்பண்ணி அருங்கிளியாள்வாராள்
மின்னல்மின்னிமழைபொழியும் வேளையதுஅம்மே
மெல்லியரேநீயும்போய் பலாமரத்தைச்சேர்ந்தாய்
அதிலிருந்தரிஷியாரும் அணைந்தாரடியம்மே
அப்போதேசோபமது வுண்டாச்சுதுனக்கு
நூற்றுவொருமாதமது சென்றலவோபிள்ளை
நீபெறுவாயென்றுமேதான் ரிஷிவுனக்குவுரைத்தார்
அந்தவுரைதனைக்கேட்டு அகமகிழ்ந்துவந்தாய்
அபபோதுனனோகத்தி ஐந்துபிள்ளைபெற்றாள்
ஓரகத்திபிள்ளைபெற்றா ளென்றுசொல்லிநீயும்
உன்மனதுதாளாமல் வருத்தமுடனெழுந்து
எண்ணிவிசாரமுற்று யிருக்குமந்தநாளில்
எந்திழையாள்பிள்ளைகளை பார்த்துமல்லோநீயும்
ஆங்காரக்கோபத்துடன் அறைந்துகொண்டுநீயும்
அடிவயிற்றிலிடித்துக்கொண்டு அடித்துக்கொண்டழுதாய்
தொண்ணூறுதிங்களிலே தோகையரேநீயும்

தோன்றுதொருகுழவிதனை யிடிக்கிடித்துக்கொண்டாய்
அப்போதுபிண்டமது கலங்கியல்லோ அம்மே
அழகானவுதிரமெல்லாம் வெளியாச்சுதல்லோ
நூற்றொருகிண்ணியிலே நுட்பமுடன்பிடித்து
நொறுங்காமல்மறைவிலே அமுக்கிவைத்தாய்பெண்ணே
நூற்றுஒருருதிங்கள்சென்ற பிற்பபாடுமைந்தர்
வேற்றுமைகளில்லாமல் வெளியானாரல்லோ
பொய்யோடிஎன்குயிகள் பெய்யோநீபுகலும்
பொறுமையுள்ளஅந்தகனார் மனுநீதியாலே
என்றுமந்தயிளங்குறத்தி தானுமங்கேநிற்க
இதுவறிந்துகாந்தாரி எண்ணமிடுவதையும்

வேறு.

இப்படியாக யிவர்களிருக்கையிலே
திரிபோதிரன்சபைக்கு சென்றதொருதாதியர்கள்
தேசத்தையாளும் திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாசனத்தருகே சென்றிறங்கிதெண்டனிட்டார்
தெண்டனிட்டதாதி திரும்பஎழுந்திருந்து
சீர்கடகக்கையதனை சிரசின்மேல்தூக்கிநின்றாள்
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதார்
தேசத்தையாளும் திரியோதிரன்தான்பார்த்து
(நீ) யார்பெண்ணேதாதி அறியவுரையுமென்றான்
ஆர்பணியுமல்ல அடியேன்திருப்பணிதான்
பேர்பெற்றுடைய பெருமாளேவும்பணிதான்
பேடையயிற்கண்ணாள் பெருந்திருவாள்தாதியென்றாள்
இங்கேநீவந்தவிதம எனக்கறியக்கூறுமென்றான்
தாமக்கருங்குழலாள் தாதியருமேதுசொல்வாள்
அப்போதுதாதியரும் அழகாகஏதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்வாசலிலே
கட்டுவச்சிவந்ததுவும் கைபார்த்துச்சொன்னதுவும்
ஐவர்நகராளுவதும் அரசுமன்னர்மாளுவதும்
பஞ்சவர்கள்ஆளுவதும் பார்மன்னர்மாளுவதும்
பாஞ்சாலன்கன்னிதனை பற்றித்துகிலுரிந்ததுவும்
அத்தனையும்சொன்னாளே அழகானகட்டுவச்சி
அந்தவுரைகேட்டு அருங்கிளியும்மாமியுமாய்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்பெண்டுகளும்
(அவர்) அங்கேதலைவிரித்து அழுதுபுலம்புவதும்
அத்தனையும்சொல்லி முடித்தாள் அவள்தாதி
தேசத்தையாளும் திரியோதிரன்கேட்டு
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்கலங்கி
ஒன்றுமொழியாமல் உத்தமனும்வீற்றிருந்தான்
பாட்டனார்வீஷ்மரும் பாராளுந்துரோணரும்

சிற்றப்பாவிதுரனும் சிருள்ளகாங்கயனும்
காஞ்சிநாடாளும் கருணருந்தானறிந்து
நலார்கடுந்திரனும் நூறுபேர்தம்பிகளும்
கானக்குறத்தியரைக் கட்டுவோமென்றுசொல்லி
கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
மார்விலங்குதோள்விலங்கு மாளாப்பெருவிலங்கு
பெருவிலங்குபோட்டார்கள் சிறையிலடைக்கவென்று
கன்னியரைத்தான்பிடித்து கழுவிலிடுவோமென்று
அல்லவரும்கூடி அழகாகவாரார்கள்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
பேடைமாசிற்மண்ணாள் பெருந்திருவாள்மாளிசென்றார்
கானக்குறத்தியரைக் கண்டுமந்தமன்னரெல்லாம்
(நீ) ஆர்காணும்கட்டுவச்சி அறியவுரையுமென்றார்
எந்தவூர்உங்களது எவ்விடமோசொல்லுமென்றார்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
மாநகரமாள்வோர்க்கு மாதுகுறமேதுசொல்வாள்

குறம்.

எந்தனதுதிருநாடுகேட்கிறையோதம்பி
எற்றவிடம்சொல்லுகிறேன் யாவர்களும்கேளீர்
இரவிசசிஆளுவதும் எந்தனுடநாடு
இந்திரனார்ஆளுவதும் எந்தனதுநாடு
ஈரேழுலோகமெல்லாம் எந்தனதுநாடு
ஈஸ்வரனார் ஆளுவதும் எந்தனதுநாடு
சொக்கரவர்ஆளுவதும் எந்தனதுநாடு
சோதியுமைஆளுவதும் எந்தனதுநாடு
அண்ணாமலையாளுவதும் எந்தனதுநாடு
உண்ணாமலையாளுவதும் எந்தனதுநாடு
கொலைகளவுயில்லாதார் ஆளுமெந்தநாடு
கோத்திரங்கள்சீர்தழைக்கும் எந்தனதுநாடு
பொய்யுரையார்ஆளுவதும எந்தனதுநாடு
புண்ணியனார்வாசஞ்செய்யும் எந்தனதுநாடு
முத்திரையமுத்தளக்கும் எந்தனதுநாடு
முன்னோர்கள்தவம்புரியும் எந்தனதுநாடு
கூடைதனில்செம்பளக்கும் எந்தனதுநாடு
கொற்றவர்களாளுவதும் எந்தனதுநாடு
வரன்முறைகள் தவறார்கள்எந்தனதுநாடு
வானவர்கள்ஆளுவதும் எந்தனதுநாடு

வேறு.

என்றுமவளுரைத்து நின்றாளேகட்டுவச்சி
நாட்டுவளப்பஞ்சொல்லி நாயகியாள்அங்கிருக்க
தேசத்தையாளும் துரியோதனன்தான்கேட்டு

ஆனல்கேள்கட்டுவச்சி அடியேனொருவார்த்தை
கூடைப்பில்முத்தளந்து கொட்டுவாரென்றுசொன்னாய்
முறத்தினில்முத்தளந்து மோருக்களிப்பேனென்றாய்
(நீ)என்னகுறைவாகி வந்தீர்காண்எந்திழையே
ஏதுகுறைவாகி யித்தெருவேயிங்குவந்தாய்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
மானகங்கொண்டவற் மங்கையருமேதுசொல்வாள்

குறம்.

மழைகளில்லைசெந்நெலில்லை மண்டலங்கள்தோறும்
மகராஜனனவற்கு வருத்தங்களுண்டாகி
செந்நெலில்லைதூரலில்லை சீமையெங்குந்தம்பி
சிறப்பானவிளைவுமில்லை தேசங்கள்முழுதும்
அத்திநகர்அரசாள்வோர்அரசர்களுண்டென்றார்
அதுகேட்டுசெந்நெலபிச்சை வாங்கவந்தேன்நானும்
கொச்சிமலைவாழ்குறத்தி குறிகளிங்கேசொல்லி
குறம்பாடிசெந்நெல்பிச்சை வாங்கவந்தேனென்றாள்
சன்னச்சம்பாசின்னசம்பா சாதிமலைச்சம்பா
சதுரானகேழ்வரகும் வாங்கிவந்தேனென்றாள்

வேறு

அந்தவுரைகேட்டு அரவக்கொடியோனும்
மாதுமுகம்நோக்கி மன்னவனுமேதுசொல்வான்
குறத்திமுகம்நோக்கி கொற்றவனுமேதுசொல்வான்
மாநகரமாளும் மகராஜன்பெண்டுகட்கு
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகிக்கு
ஆச்சியற்குசொன்னகுறி அடியேற்குச்சொல்லுமென்றான்
யாவருக்கும்சொன்னகுறி எனக்குஉரையுமென்றான்
முன்னடந்தகாரியங்கள் வெல்லியரேநீயுமைத்து
இனிமேல்நடக்கும்வகை யெனக்குநீசொல்லுமென்றான்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
கூறுவாள்கொம்பனையும் கோதுகிளிபோல
வாய்திறந்துதானுரைப்பாள் மாதுநல்லகட்டுவச்சி

குறம்.

நெல்விரையைத்தான்பரப்பி நேர்ந்தகுறிஎன்பாள்
நீலகண்டநிமலியரை வாக்கருளுமென்பாள்
காஞ்சிநகர்தனில்வாழும் காமாட்சிஎன்பாள்
காளையற்குக்குறியுரைக்க வாக்கருளுமென்பாள்
உச்சிதமாய்நெல்லெடுத்து உண்ணாமுலையென்பாள்
உத்தமனார்குறியுரைக்க வாக்கருளுமென்பாள்
பச்சைவிரைகைபிடித்து பாவையரும்அப்போ
பச்சைமலைத்தாயாரை வாக்கருளுமென்பாள்
அச்சுதரேஅலமேலு மங்கையரேவந்து

அரசனுக்குகுறியுரைக்க அருள்புரியுமென்பாள்
விக்கினரைவேலவரை வேண்டிமிகத்தொழுது
மெய்யானகுறியுரைப்பாள் மெல்லியருமங்கே
தேசமுழுதாளுகின்ற துரியோதன மன்னு
சிறப்பானகுறியுரைப்பேன் சிந்தைமகிழ்ந்தருளும்
அவனிமுழுதாளுகிற அரசர்சிகாமணியே
ஆனகுறியானுரைப்பேன் அரனருமறிய
முன்னடந்தகாரியங்க ளொன்றுரைப்பேன்கேளும்
முற்றுமுள்ளராச்சியங்க ளாண்டுவருநாளில்
நித்திலங்குபூமுடியர் நிறைந்திருக்குஞ்சபையில்!
நினைத்துக்கொண்டாய்மைந்தனுக்கு கலியாணஞ்செய்ய
மன்னர்களைத்தானழைத்து மருகங்களையுரைத்து
மகராசர்சம்பந்தம் வேண்டுமென்றுநீயும்
பாரளந்தான்தன்மகளைக் கொள்ளவென்றுநீயும்
பலத்ததொருசபைதனிலே எண்ணமிட்டாய்நீயும்
அதுவறிந்துவுன்தகப்ப னுகாதென்றுசொல்ல
அருகிருந்தசகுனியவன் ஆகுமென்றேயுரைத்தான்,
மண்டலத்கையாளுகின்ற மன்னர்களும்நீயும்
மாயன்பதிமிகநோக்கி வந்தீரல்லோஅன்று
ஆயருடசபைதனிலே அருகில்வந்துயிருந்து
அச்சுதரைபெண்கேட்க அவருஞ்சம்மதித்து
கோபாலப்பெட்டிரொம்பக் கொட்டுமெட்ரூர்பணத்தை
கொற்றவனே அதுக்கிசைந்து கொடுத்தாய்வெகுபணத்தை
கொண்டுவந்தபொன்னையெல்லாம் கோபாலரெடுத்து
கொப்பெனவேபதராக்கி தூற்றிவிட்டார்காற்றில்
மறுபடியும்பொன்கொடுத்தால் பெண்கொடுப்பேனென்ருர்
மன்னவனேநீமகிழ்ந்து மன்னர்களையனுப்பி
களஞ்சியத்துப்பொன்னையெல்லாம் கொண்டுவரச்சொல்லி
கரியமாலானவற்கு கணக்குடனேஈய்ந்தாய்
அதுவறிந்துசுந்கரியைத் தாறேனென்றுசொன்னுர்
அடவாகமுகூர்த்தமிட்டு அனுப்பிவைத்தார்உன்னை
இன்றெட்டாநாளையிலே முகூர்த்தமென்றுசொல்ல
எம்பெருமாள்தானுரைக்க ஏகிவந்தாய்நீயும்
அம்பலத்துசபையிலுள்ள யாவர்களும்நீயும்
ஐம்பத்தாறுதேசத்து மன்னர்களும்வந்தார்
லக்குணற்குமணக்கோலம் நன்ருகச்செய்து
நாடாளும்ராஜர்களும் நலமுடனேகூடி
மூன்ருநாளாகையிலே முடிமன்னரெல்லாம்
முத்துமுடிராஜாக்கள் பயணமிட்டுவந்தீர்
ஆயனுடபதிநோக்கி அனைவர்களும்வந்து
அரிராமர்தன்கொலுவி லிருக்குமந்தவேளை
அர்ச்சுனனுரீன்றெடுத்த அபிமன்னன்தானும்

அவனுடையதோழர்களும் அங்ஙனேவந்து
மணவறையில்வீற்றிருந்த இலக்குணரையிழுத்து
மன்னர்சபைமுன்பாக மயிர்பிடித்துச்சிரைத்தார்
ஐந்துநல்லகுடுமிவிட்டு அவன்றலையைச்சிரைத்து
அறசாணிக்காலுடனே இலக்குணனைகட்டி
மாயவரைப்பிடித்திழுத்து மரத்தோடேகட்டி
மன்னவனேயுங்களைத்தான் மண்டைநொறுங்கடித்து
மாயன்மகள்சுந்தரிக்கு மணமாலைசூட்டி
மறுபடியும்தன்பதிக்கு மன்னன்வந்துசேர்ந்தான்
அபிமன்னன்போனபின்பு அரசர்களேநீங்கள்
ஆயன்பதிவிட்டெழுந்து அபிமானங்குலைந்து
வாளபிமன்செய்ததினால் மானபங்கமாகி
மரியாதைத்தாழ்வாகி மண்டலத்தேவந்தீர்
பொய்யோதானென்குறிகள் மெய்யோநீபுகலும்
பூமிமுழுதாளுகின்ற புண்ணியனேஎன்றாள்
முன்னடந்தகாரியங்கள் இன்னமுண்டுசொன்னால்
முடியாதுபொழுதுமில்லை மன்னவரேகேளும்
இன்னமொருகாரியங்க ளெடுத்துரைப்பேன்கேளும்
ஈரேழுலகளித்த யீஸ்பரனார்அரிய
பஞ்சவரைக்கொண்டுவந்து பாரசபைநிறுத்தி
பங்கப்படுத்தியல்லோ பார்விலங்கைபோட்டீர்
ஐவர்களைசூதாடி அறைதனிலேயடைத்து
ஆரணங்கைகொண்டுவந்து அம்பலத்தில்நிறுத்தி
ஐவருடதேவிதனை அம்பலத்தில்நிறுத்தி
அனைவோருந்தாமறிய ஆடையுரிந்தீர்கள்
பத்தினியாள்மனதறிய பாரசபைதனிலே
பரமசிவன்பார்வதியை சாட்சிவைத்தாளங்கே
மாதுநல்லாள்மனதறிய மன்னர்சபைதனிலே
மாயவனைச்சீதையனை சாட்சிவைத்தாளங்கே
பொற்கொடியாள்மனமறிய போர்மன்னர்சபையில்
பிரமாவைசரஸ்வதியை சாட்சிவைத்தாளங்கே
வேல்புருவங்கண்ணாளும் விரிந்ததலையுடனே
மீளாதசாபமிட்டுப் போனாள்வனவாசம்
மன்னாவுன்பூமுடியை மண்ணில்விழத்தறித்து
மயிர்முடிப்பேனென்றுசொல்லி போனாள்வனவாசம்
கொற்றவனேவுன்னுடைய குடலதனையெடுத்து
கொண்டையதுமுடிப்பேனென்று போனாள்வனவாசம்
மன்னவனேவுன்னுதிரம் எண்ணெயென்றுதடவி
மயிர்க்கூந்தல்முடிப்பேனென்று போனாள்வனவாசம்
பனிரண்டுமோராண்டு சென்றவுடன்மன்னர்
பாரதப்போர்முடிக்கையிலே பஞ்சவர்களைவர்
ஆயனொருசாரதியாய் அர்ச்சுனன்தேரேறி

அரசுமன்னர்பூமுடியை அடங்கலுமேதறித்து
நாற்றொருவர்பூமுடியை நொறுங்கடித்தபின்பு
கொடிப்பொழுதிலுன்முடியை தரையில்விழவடித்து
வீமனதுதெண்டாலே நீமடிந்தபிறகு
விபரீதப்பாரதப்போர் முடிந்ததென்றுசொன்னார்
பாஞ்சாலன்எக்கியத்தில் வந்துதித்தகன்னி
பகைமுடிந்ததென்றுசொல்லி மார்பின்மேலேறி
படுகளங்கள்முழுமையுந்தான் பாஞ்சாலியறிந்து
பாவையருந்தன்கூந்தல் வாரிமுடிப்பாளே
கூந்தல்முடித்தானபின்பு கொற்றவர்களைவர்
கோடானயாகஞ்செய்து குவலயத்தையாள்வார்
கருணையுடமைந்தனவன் காளைவில்வகேது
கனத்தநல்லமுடிசூட்டி அத்திபுரமாள்வான்
அங்கவளநாடனைத்தும் அவனாளப்போரான்
அவனியெல்லாம்பஞ்சவர்க ளாண்டிருப்பார்கள்
மன்னரிந்தபட்டணத்தை யரசாளப்போரார்
மாறுதபெருநரகம் நீங்களுமேயாள்வீர்
ஐவரந்தபஞ்சவர்கள் அரசாண்டுவாழ்வார்
அழியாதபெருநகரம் நீங்களுமேயாள்வீர்
என்றுமிந்தக்கட்டுவெச்சி எடுத்துரைத்தாளங்கே
இதுகேட்டுதுரியோதனன் எங்கிமுகம்வாடி

வேறு.

குறத்தியுரைகேட்டு கொற்றவனும்வேறுபட்டு
கட்டுவெச்சிதானுரைக்க காளையதுகேட்டு
(அவன்) சிந்தைமிகநொந்து திடுக்கிட்டுமெய்மறந்து
மற்றுமொருநினைவாய் மன்னவனுங்கோபமதாய்
கானக்குறத்தியல்ல கட்டுவெச்சிதானுமல்ல
பஞ்சவரைமாலையிட்ட பாஞ்சாலியென்றறிந்து
ஐவரையுமாலையிட்ட அருக்கிளியாளென்றறிந்து
அங்குள்ளசேவகரை ஆணழகன்தானழைத்து
தூதுவரைத்தானழைத்து தொழுவிலங்குபோடுமென்றான்
கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
தோள்விலங்கு மார்விலங்கு தூக்காப்பெருவிலங்கு
தூக்காவிலங்குமிட்டுத் தொழுவிலங்குபோடுமென்றான்
ஆரணங்குகுறத்தியரை அடையுங்கிடங்கிலென்றான்
அப்போதுதூதுவர்கள் அட்சணமேயதுசெய்தார்
கட்டழகிமாதினுக்கு கழட்டாவிலங்குமிட்டு
ஆரணங்குமாதரையும் அரையிலேதள்ளிவந்து
சேர்விலங்குபூட்டியல்லோ சிறையில்டைக்கவென்று
மாளாவிலங்குமிட்டு மங்கையரைத்தானடைத்தார்
இப்படியாகஇவள் இங்கேயிருக்கையிலே

தோராவடிவழகி துரோபதையுமேதுசெய்தாள்
மாயவரைத்தானினைந்து மங்கைபுலம்புகிறாள்
கோவிந்தாவைகுந்தா கோபாலாவாருமென்றாள்
அம்பலத்துவாசலிலே அன்றுவந்துகாத்தீரே
அப்போதுகாத்ததுபோல் இப்போதுகாருமையா
மன்னர்சபைநடுவே மானமதுகாத்தீரே
மாநாகங்கொண்டவன்றன் மனையில்வந்துகாருமையா
ஆரணங்குஎந்தனையும் ஐவரிடஞ்சேருமையா
பாஞ்சாலிஎந்தனையும பஞ்சவரிடஞ்சேரும்
ஆனையைக்காத்ததுபோல் அடியாளைக்காருமையா
மைந்தரைக்காத்ததுபோல் மாதவனேகாருமையா
என்றுபுலம்பி யிருந்தாள்துரோபதையும்
அந்தச்சமையம் அதுவறிந்துஎம்பெருமாள்
மாயன்பெருமாள் மனதில்நினைவாகி
தேசத்தையாளுந் துரியோதனன்மாளிகையில்
மாநாகங்கொண்ட மகராஜன்வாசலிலே
ஐவருடதேவி ஆரணங்குதுரோபதையாள்
குறமாதரைப்போல.கொம்பனையாள்வேஷங்கொண்டு
கட்டுவச்சிபோலாக கன்னிவடிவெடுத்து
சகதேவராஜனைத் தகுந்தகுழந்தையாக்கி
மைத்துனனானவனை மைந்தனுருவாக்கி
ஐவருடதேவி அபிஷேகப்பத்தினியாள்
குறத்திவடிவாகி கொம்பனையாள்வந்ததுவும்
கட்டுவச்சிபோலாகக் கன்னியங்கேவந்ததுவும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகிக்கு
கைபார்த்துக்கட்டுவச்சி கனத்தகுறிசொன்னதுவும்
முன்னடந்தகாரியங்கள் முழுதும்வுரைத்ததுவும்
இனிநடக்குங்காரியங்கள் யாவுமுரைத்ததுவும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தானறிந்து
அழுதுபுலம்புவதும் அத்தையற்குச்சொன்னதுவும்
மண்டையுடைத்தழுது மாமியற்குச்சொன்னதுவும்
மாமியதுவறிந்து மாளிகைக்குவந்ததுவும்
குறத்தியின்வாய்மொழியைக் கொம்பனையாள்கேட்டதுவும்
மயிலிணையாள்தன்வார்த்தை மாமியவள்கேட்டதுவும்
மைந்தருக்குச்சொல்லி அனுப்பினதுமங்ஙனவே
மாநாகங்கொண்ட மகனுக்குரைத்ததுவும்
நாகக்கொடிபடைத்த ராஜனறிந்ததுவும்
குறத்தியருகில்வந்து குறியுரைக்கச்சொன்னதுவும்
பாவிதுரியனுக்கும் பாவைகுற.சொன்னதுவும்
கேட்டுபிடிவிழுந்து கீர்த்தியில்லாமன்னவனும்
அரும்பாவிசண்டாளன் ஆலோசனைகள்செய்து
பஞ்சவர்கள்தேவியென்று பாவியறிந்துகொண்டு

ஐவருடதேவியென்று அரும்பாவிதானறிந்து
பாஞ்சாலன்கன்னியர்க்கு பாரவிலங்கிட்டதுவும்
அருங்கிளியாள்துரோபதையை அறையிலடைத்ததுவும்
அத்தனையும்தாமறிந்து ஆயரெழுந்திருந்து
கைமோசம்வந்துதென்று கரியமால்தானெழுந்து
துவாரகைவிட்டுமல்லோ சுவாமியங்கேவாராரே
வேர்க்கவிரிவிரிக்க விலாடபுரத்தில்வந்து
ஆருமறியாமல் அங்கொருவர்காணுமல்
எவருமறியாமல் இனியொருவர்காணுமல்
இவருக்கும்முன்பிறந்த இளவிஜயன்முன்னேவந்து
அருச்சுனனுர்முன்னேவந்து ஆயருமேயேதுசொல்வார்
வாள்விஜயன்முன்னேவந்து மலைராமரேதுசொல்வார்
அருச்சுனராஜாவே அனர்த்தம்வந்துசேர்ந்ததுகாண்
வாள்விஜயாமன்னவனே மதிமோசம்வந்ததுகாண்
பாஞ்சாலன்பெற்றபெண்ணை பாவிசிறைவைத்தான்காண்
கொற்றூர்குழலியலர கொடிசிறையில்வைத்தான்காண்
கால்விலங்குகைவிலங்கு இட்டும்சிறையில்வைத்தார்
காவலுள்ளதுரோபதையைக் கடுகேவழைக்கவேண்டும்
மாதுதுரோபதையை மாளிகைக்கழைக்கவேண்டும்
(நீர்)கொற்றவனுர்வீரியரே குறவனைப்போல்வாருமென்றூர்
அப்போதுவாள்விஜயன் அரிராமர்தன்தயவால்
கொற்றவனுர்வீரியரும் குறவேஷமானுரே
அணிபிள்ளைகீரிகுத்தும் ஆண்மைக்குறவனுனர்
கரடிபுலிகள்குத்தும் கன்னக்குறவனுனர்
தட்டிவரிந்துகட்டி சல்லடமும்மேற்பூண்டு
வில்லம்புகைபிடித்து வேந்தன்முதுகணிந்து
கருவேப்பிலையெடுத்துக் கடுகெனவேதோளிலிட்டு
சுருண்டக்கய்வற்றலது சுக்கன்வற்றல்தானெடுத்து
காட்டுக்கிளாக்காயும் கடுகெனவேகைபிடித்து
குறவனைப்போலாக வாரானேகொற்றவனும்
கன்னக்குறவனைப்போல் வாரானேகாளையவன்
காடுசெடிதாண்டி கரியமலைதாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
அத்திபுரஞ்சேர்ந்தான் ஆணலழகுமன்னன்
ராஜமன்னன்வீதியிலே நடந்துவாரான்வாள்விஜயன்
சிங்கியைக்காணுமல் தேர்விஜயன்தேடிவாரான்
குறத்திதனைக்காணுமல் குறவனவன்தேடிவாரான்
அத்திபுரம்வீதியிலே ஆணழகன்யேதுசெய்வான்
சுண்டக்காய்கொள்வீரோ சுக்கன்காய்கொள்வீரோ
காட்டுக்கிளாக்காய் கன்னியரேவேண்டுமோதான்

கைக்குழந்தைகிலுகிலுப்பை கன்றுதும்புகொள்வீரோ
கொற்றவன்வீதியிலே குறத்திதனைக்கண்டதுண்டோ
மன்னவர்கள்வீதியிலே மங்கையரைக்கண்டதுண்டோ
மைந்தனும்மாதருமாய் மாளிவிட்டுவந்தார்கள்
எட்டுநாளாச்சுதையோ இளங்குறத்திவீடுவிட்டு
பத்தொருநாளாச்சுதையோ பாவைநல்லாள்வீடுவிட்டு
கைலாயம்குழியுரைத்து கடுகெனவேவீடுவந்தாள்
பிர்மலோகம்குரியுரைத்து பெண்ணழகிவீடுவந்தாள்
வைகுந்தம்போயிருந்து வடிவழகிவீடுவந்தாள்
எமலோகம்போயிருந்து இளங்கொடியாள்வீடுவந்தாள்
நாகலோகம்போயிருந்து நாயகியாள்வீடுவந்தாள்
எட்டொருநாளாச்சுதல்லோ என்மனையாள்வீடுவிட்டு
பத்தொருநாளாச்சுதல்லோ பத்தினியாள்வீடுவிட்டு
ஏச்சுக்குவச்சல்லோ என்குலத்தார்தாமறிந்தால்
ஓரகத்திமச்சினிமார் வுகாசினங்கள்சொல்லிடுவார்
மாமியார்தானறிந்தால் மட்டுமருங்குலையார்
மாசில்லாவம்மிசத்தில் மருவுபடநாளாச்சு
ஆரணங்குதன்னாலே அழும்புவரநாளாச்சு
அழகுள்ளகன்னியென்று அடக்கிவசங்கொண்டார்கள்
வடிவுள்ளகன்னியென்று வையகத்தார்கொண்டுசென்றார்
மாயப்பொடிமருந்தை மயிலிணைக்குப்போட்டார்கள்
சொக்குப்பொடிமருந்தை சுந்தரிக்குப்போட்டார்கள்
மந்திரத்தால்தந்திரத்தால் மாதையழைத்தார்களோ
ஆண்மைவலுமையினால் அடக்கிவசம்கொண்டார்களோ
என்றுசொல்லியிக்குறவன் இங்கேயழுதுவாரான்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்வீதியெல்லாம்
கன்னியரைத்தேடியல்லோ காலையழுதுவாரான்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்வீதியிலே
காட்டுக்குறவனவன் கத்திப்புலம்புகிறான்
குறத்தியைக்காணாமல் கூவியழுகிறானே
வாடிப்புலம்புவதும் மட்டுமிதங்களில்லை
சொல்லிப்புலம்புவதும் செவிகேட்கமுடியவில்லை
அங்கிருக்குந்தாதியர்க ளணியிழைமார்ஓடிவந்து
ஆர்காணும்நீகுரவா அழுதுபுலம்புவதேன்
எவர்காணும்நீகுறவா யிங்கேபுலம்புவதேன்
அழுதவயணமதை ஆரணங்குசொல்லுமென்றாள்
அப்போதுகுறவனவன் அழகாகவதுசொல்வான்

குறம்.

கன்னியெங்கள்கட்டுவெச்சி காளைகுறமுறைக்க
கண்டுவந்துவீதிகளில் குறமுறைக்கவந்தாள்
மாலையிட்டநாள்முதலாய் எனைப்பிரிந்ததில்லை
மாதுநல்லாள்வீடுவந்துவாரமொன்றுமாச்சே
கூரையிட்டநாள்முதலாய்க் கொற்றவனைப்பிரியாள்
கொம்பனையாள்வீடுவந்து வாரமொன்றதாச்சே
எட்டொருநாளாச்சுதம்மா என்வீடுவந்து
இளங்கொடியாளிருப்பிடந்தான் எங்கேநானறியேன்
பத்தொருநாளாச்சுதம்மா பாவைமனைவந்து
(என்)பத்தினியாளிருக்குமிடம் பாவிநானறியேன்
கன்னியரைக்கண்டாலே கடுகனவேயழைத்து
பலராமர்தன்னருளால் கடிகியனைபோவாள்
உத்தமியைக்கண்டாலே உடனேநானழைத்து
உம்பர்பிரான்தன்னருளால் வீடுபோய்சேர்வேன்
கன்னிரைத்தேடுவது பலராமரறிந்தால்
கனமோசம்வந்திடுமே எங்கள்குலந்தனக்கு
பத்தினியைத்தேடுவது பரபசிவனறிந்தால்
பழிபாவம்நேர்ந்திடுமே எங்கள்குலந்தனக்கு
மெல்லியரைத்தேடுவது வள்ளிவேலரறிந்தால்
வெகுமோசம்வந்திடுமே எங்கள்குலந்தனக்கு
கொம்பனையாள்வீடுவர வில்லையென்றேயுரைத்தால்
குடிப்பழுதுவந்திடுமே குறக்கூட்டந்தனக்கு
வச்சானசாதியல்ல எங்கள்குறச்சாதி
இழிவானசாதியற்கும் கீழ்ச்சாதிநாங்கள்
காக்காய்தின்போங்கழுகுதின்போம் காட்டோந்திசுடுவோம்
கன்னியரைவிலைக்குவிற்று அமுதுபொசியோமே
மானைக்குத்திவிருந்திடுவோம் மாயக்குறச்சாதி
மனையாட்டிதன்னைவிற்று அமுதுபுசியோமே
ஏனம்திம்போம்மிருகம்திம்போம் எங்கள்குறச்சாதி
ஏந்திழையைசோரம்விட்டு அமுதுபுசிபோமே
பாரப்புலிமிருகங்குத்திப் பலத்தவிருந்திடுவோம்
பத்தினியைவிலைக்குவிற்று அன்னம்பொசியோமே
எந்தனுடகுறத்திதனை யாரழைத்தாரோடா
இழுத்தவரைக்கண்டாலே யிருதுண்டாய்ப்பிளப்பேன்
கன்னிதனைத்தொட்டிழுத்த காளைதனைக்கண்டால்
கண்டதுண்டமாய்த்தறித்து கனத்தஉயிர்வதைப்பேன்
அரண்மனையும்ஆஸ்தானமும் அடங்கலும்நானிடித்து
அவளுடையதேவிகளை அழைத்திடுவேன்பெண்டாய்
கோபுரமும்கோயில்களும் கொத்தளமுமிடித்து

கொற்றவனார்தேவிகளைக் கூடியணைந்திடுவேன்
கண்டேனேயாமாகில் கண்டதுண்டஞ்செய்வேன்
கன்னியரை அழைத்துக்கொண்டு கடுகிமனைபோவேன்

வேறு.

என்றுமவனுரைக்க இளங்கொடிமார்தான்கேட்டு
கால்நடுங்கிகைநடுங்கி கடுகெனவேவோடிவந்து
மாநகரமாளும் மகராசன்தேவியற்கு
தெண்டனிட்டுத்தாதியர்கள் சீக்கிரமாய்ஏதுசொல்வார்
வணங்கிநமஸ்கரித்து மாதருக்கேதுசொல்லார்
ஆச்சிநீர்கேளும் அடியேன்ஒருவார்த்தை
மயிலிணையேஉன்னுடைய வாசற்படிகாத்திருந்தேன்
அங்கேயொருகுறவன் அழுதுபுலம்பிவந்தான்
அழுதகுரல்கேட்டு ஆணழகாயென்னவென்றோம்
மன்னாஅழுதவகை வாய்திறந்துசொல்லுமென்றோம்
மலைக்குறவன்தானுரைத்த வார்த்தையதைக்கேளுமென்றார்
கட்டுவச்சிநாயகியை கைதொட்டிழுத்தவரை
குறத்தியைத்தானிழுத்து குகையிலடைத்தவரை
கண்டேனேயாமானால் கண்டதுண்டஞ்செய்வேனென்றான்
பார்த்தேனேயாமானால் பழுதுவருமென்றுரைத்தான்
அத்திபுரத்தையெல்லாம் அடிபோடிடிப்பேனென்றான்
மகராஜன்பட்டணத்தை மண்ணோடேசாய்ப்பேனென்றான்
ஆமணக்கும்பருத்திவிரை அங்கேவிரைப்பேனென்றான்
தங்கமதில்கோபுரத்தை தரையோடேசாய்ப்பேனென்றான்
ஆண்சிறையும்பெண்சிறையும் யாவும்பிடிப்பேனென்றான்
ஆணாப்பிறந்தவரை அடப்பம்பிடிக்கவைப்பேன்
மன்னவர்களானாலும் மண்டைபிளந்திடுவேன்
தேவர்களானாலும் சிதரடிப்பேன்என்றுரைத்தான்
அந்தவுரைகேட்டு ஆச்சியரேசொல்லவந்தோம்
குறவனுரைத்ததெல்லாம் கொம்பனையேகூறவந்தோம்
என்றுமிகவுரைக்க ஏதுசொல்வாள்பெருந்திருவாள்
மாநகரமாளும் மகராஜனனவற்கு
நீங்களுரையுமென்றாள் நித்திலங்கும்பூமுடியாள்
அந்தவுரைகேட்டு அலங்காரத்தாதியர்கள்
அரண்மனைஏழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
மாளிகைகடந்து மன்னருடவீதிவிட்டு
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாதனத்தருகே சென்றவளுந்தெண்டனிட்டாள்
(நீ) யார்பெண்ணேதாதி அறியவுரையுமென்றார்

ஆர்பணியுமல்ல அடியேன்திருப்பணிதான்
இங்கேநீவந்த தெனக்கறியகூறுமென்றான்
தாதியவள்கைதொழுது தானங்கேயேதுசெல்வாள்
கால்விலங்குகைவிலங்கு கழுட்டாப்பெருவிலங்கு
விலங்கிட்டுமூலை யடைத்தீரேமெல்லியரே
கட்டுவச்சிதன்னையல்லோ காவலிலேவைத்தீரே
கட்டுவச்சிநாயகனார் கன்னக்குறவனவன்
பத்தினியைத்தேடியல்லோ பார்மன்னர்வீதிவந்தான்
பூங்குறத்திதன்கணவன் வந்தான்குறவனவன்
கன்னியரைத்தொட்டிழுத்துக் காவலிலேவைத்தவரை
கண்டானேயாமானால் கண்டதுண்டஞ்செய்வானும்
இந்திரனேயானாலு மினிவிடமாட்டேனென்றான்
தேவர்களானாலும் சிதறடிப்பேனென்றுசொன்னான்
அந்தவுரைகேட்டு அறிக்கையிடவந்தேனென்றாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
எண்ணாதுமெண்ணியல்லோ ஏங்கிமனந்தளர்ந்து
அருகிருந்ததோழனுக்கு ஆளனவன்ஏதுசொல்வான்
காஞ்சிநாடளும் கருணர்பெருமாளே
குறத்திதனைத்தேடி வந்தானாம்குறவனவன்
அந்தக்குறவனையும் அடையும்சிறையிலென்றான்
கால்விலங்குகைவிலங்கு கழுட்டாப்பெருவிலங்கு
விலங்கிட்டுமன்னவனை விடுகிடங்கில்போடுமென்றான்
அந்தவுரைகேட்டு அங்கதேசாதிபதி
வீஷ்மர்முகம்நோக்கி வேந்தரெடுத்துரைபார்
இனியெட்டுத்திங்களிலே யினியபோருண்டாகி
பாரதப்போரதனில் படைமன்னர்சேவகரும்
அர்ச்சுனன்சண்டையிலே அரசர்கள்வீரியமும்
நகுலனுடசண்டையிலே ராஜாக்கள்சேவகமும்
வீமனுடசண்டையிலே விலவேந்தர்ஆண்மைகளும்
சகதேவன்சண்டையிலே சாமார்த்தியமுள்ளவன்காண்
வெளிப்படநாளாச்சு வேந்தர்படைமுகத்தில்
இதற்குள்ளேயிங்கொருபோர் ஏன்தேடிக்கொள்ளுகிறீர்
நாளைக்கும்போரு நடக்கவேதாமிருக்க
இப்போதும்போரு எழுப்பவும்நியாயமுண்டோ
குறவனைதான்பிடித்துக் கிடங்கிலடைப்பானேன்
மலைக்குறவன்தனையடித்து வன்சிறையில்வைப்பானேன்
மலையிலேவாசம்பண்ணும் வனக்குறவரெல்லோரும்
இவனைச்சிறையில்வைத்தால் ஆரார்முடிகள்போமோ
அத்திபுரமனைத்தும் அடங்கலுமண்ணாமோ
கோசவளநாடும் குமுறிதழும்பிடுமோ

பஞ்சவர்கள்கையாலே மாளுதற்குமுன்பாக
குறவருடகையாலே கொற்றவர்கள்மாளனுமோ
குவலயத்தையாண்டமன்னர் குறவனாலேமாளனுமோ
வையகங்களுள்ளவும் மாராதபேராகி
சூரியருள்ளளவும் தொல்லுலகில்பேராகும்
குழிபுரைக்கவந்ததொரு குறத்தியவள்தனையும்
தேடியழைக்கவந்த தெளிந்தகுறவனையும்
அனுப்பிவிடும்அனுப்பிவிடும் அரசாளும் மன்னர்களே
போகவிடுமென்றுசொல்லி பொற்கருணன்தாமுரைத்தார்
அங்குள்ளமன்னர் அரசர்களும்தான்கேட்டு
கருணர்வுரைத்துகது காரியந்தானென்றுசொன்னார்
தேசத்தழகன் திரியோதிரன்கேட்டு
அங்கிருக்கும்தூதுவரை அரசமன்னன்தான்பார்த்து
அறைதனிலடைத்துவைத்த அழகுகுறத்திதனை
கல்லறையில்உள்ளடைத்த மெல்லியரைவெளியேவிடும்
கனத்தசெந்நெல்கொடுத்து மாதரைப்போகவிடும்
சுட்டசெந்நெல்கைகொடுத்து தோகையரைப்போகவிடும்
போகவிடும்போகவிடும் பொற்கொடியாள்நாயகத்தை
செல்லவிடும்செல்லவிடும் தேனர்கருங்குழலே
என்றவுரைகேட்டு எழுந்திருந்தார் தூதுவரும்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
குறத்தியிருப்பிடத்தே வந்தார்கள்கொற்றவர்கள்
சட்டிவைத்துசெந்நெல் வறுத்துமேகைகொடுத்து
கொள்ளும்பயிறுமங்கே கூடவறுத்தார்கள்
எள்ளும்பயிறுமங்கே எடுத்துவறுத்தார்கள்
அத்தனையுங்கைபிடித்து ஆணழகர்வெளிவாரார்
சுத்தியவர்கைபிடித்து தோகைநல்லாள்முன்னேவந்து
இட்டவிலங்கை யிணைவிலங்கைதட்டிவிட்டார்
போட்டவிலங்குதனைப் பொட்டெனவேதட்டிவிட்டு
வறுத்தசெந்நெல்லைகொடுத்து மங்கையரேயேகுமென்றார்
சுட்டசெந்நெல்கைபிடித்து தோகையரேநடவுமென்றார்
கொடுத்ததொருசெந்நெல்களை கொட்டினார்கூடைதனில்
வாங்கிநடக்கையிலே மயிலிணையாளேதுசொன்னாள்

குறம்.

இன்னமொருபத்துதிங்கள் சென்றபிறகல்லோ
இவர்கள்முடிபூமியிலே யிறக்கவும்நாளாச்சு
பத்தினியாள்சாபத்தினால் பார்மன்னர்நீங்கள்

பஞ்சவர்கள்கையாலே மாண்டிடுவீரென்றாள்
என்றுசொல்லிக்குறத்தியவள் ஏகிவழிநடந்து
இளவிஜயன்முன்னேவந்தாள் இளங்குறத்திதானும்
அர்ச்சுனனைக்கண்டவுடன் அருங்கிளியாள்தானும்
ஆவலுடன்குறவர்முன்னே அருங்கிளியாள்சொல்வாள்
அத்திபுரவீதியிலே அருங்கிளியாள்வந்தேன்
அவ்வீதிஅரசரெல்லாம் அழைத்தாரல்லோபெண்டாய்
மண்மீதில்அழிவீரென்று மன்னருக்குவுரைத்து
மற்றுமொருவீதியிலே குறம்பாடிவந்தேன்
குறம்பாடிவீதிவரக் கொம்பனையார்கேட்டு
கொச்சைக்குறத்தியென்று எனையழைத்தார்மனைக்கு
மகராஜன்தேவியராம் மயிலிணையாள்தனக்கு
மங்கையவள்கேட்டுமல்லோ மயிர்விரித்துஅழுதாள்
அத்தையவள்காந்தாரி அருகாகவந்தாள்
அவள்தனக்குங்குறியுரைத்தேன் ஆணழகாகேளும்
மாபாவிகேட்டுமந்த மைந்தனுக்குவுரைக்க
மண்ணாளுந்திரியோதிரன் வந்துகுறிகேட்டான்
அரசுமுடிமன்னனுக்கு ஆனகுறிசொன்னேன்
அவன்கேட்டுமன்னவனும் அடைத்தானேசிறையில்
கால்விலங்குகைவிலங்கு கனக்கவேதான்பூட்டி
காவலிலேவையுமென்றான் கள்ளனைப்போலென்னை
மன்னன்வைத்தகாவலிலே மயிலிணைநானிருந்து
மாயவரைக்கைதொழுது மாதுவெளியானேன்

வேறு.

குறத்தியுரைத்ததெல்லாம் குறவனவன்கேட்டு
அரசாளுமன்னனுக்கு ஆண்மைகளுண்டானால்
அவனொற்றராசனுடன் எதிர்த்துப்போர்செய்யவேண்டும்
ஐவரையும்போலாக வைத்தானோகாவலிலே
ஆரென்றுஎண்ணியிருந்தானோஆணழகன்
கள்ளிதிருடியைப்போல் கட்டவந்தகாரியமேன்
விலங்கிட்டமன்னவனை வெட்டித்தலைதுணிப்பேன்
காவலிலேவைத்தவனை கண்டதுண்டஞ்செய்திடுவேன்
ஐவருடகையாலே அடியோடேமாளுதற்கு
காலங்களாச்சுதென்று கட்டழகன்போகலுற்றான்
குறவனுங்குறத்தியரும் கூடிவழிநடந்தார்
கட்டுவச்சிநாயகியும் கணவனுடனாக

அத்திபுரந்தாண்டி அங்கவளநாடுவிட்டு
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
விலாடநகற்கருகே வந்தாரிருவருமாய்
குறத்தியுருவழித்து கொம்பனையாள்போலேவாராள்
கட்டுவச்சிவேஷமாறி கன்னியருமங்கேவந்து
விலாடபுரத்தரசன் மனைவந்துவாழ்ந்திருந்தாள்
பணிப்பெண்ணைப்போலாகப் பாஞ்சாலியங்கிருந்தாள்
காண்டாவனமெரித்த காளையருச்சுனனும்
குறவனுருமாறிக்கொற்றவனும்வடிவெடுத்து
பேடியைப்போலே புகுந்தானரண்மனையில்
தர்மரைக்கண்டுமவன் சாஷ்டாங்கதெண்டனிட்டு
பாஞ்சாலன்பெற்றதொரு பத்தினியாள்துரோபதையும்
குறத்திவடிவெடுத்து கொம்பனையாள்சென்றதுவும்
அத்திபுரத்தார்க்கு ஆனகுறம்சொன்னதுவும்
கபடன்துரியோதனன் காவலில்வைத்ததுவும்
ஆபரதுவறிந்து அவர்வந்துரைத்ததுவும்
அத்திபுரம்போய் அழைத்துவந்துசேர்ந்ததுவும்
அத்தனையுந்தானுரைத்து அர்ச்சுனன்போய்நடந்தான்
ஐவரும்துரோபதையும் அங்கேயிருந்தார்கள்
மன்னவரும்தேவியரும் மகராஜன்பட்டணத்தில்
சுகமாகவாழ்ந்திருந்தார் சுந்தரப்பூமுடியார்
இந்தக்கதைதன்னை எழுதிப்படித்தவர்கள்
பாஞ்சாலிதன்குறத்தை பத்தியுடன்கேட்டவர்கள்
துரோபதைதன்குறத்தை துரிதமாய்ப்படித்தவர்கள்
மாயன்பெருமாளின் மகதேவர்கிருபையினால்
நற்பதவிதானடைவார் நாட்டிலுள்ளமானிடர்கள்
ஆல்போலேதழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திருப்பார்
வாழிவாழியென்று சொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

துரோபதைகுறம்.

முற்றிற்று.